2017 ஜூன் 19
திங்கள்
விலை: 20/-

ஹிஜ்ரி 1438 ரமழான் பிறை 24 | பக்கங்கள் 08 | மணி 03 | ஒளி 092

NAVAMANI DAILY
நவமணி தினபதா
# நவமணி
தமிழ்பேசும் மக்களின் சுதந்திரமான குரல்

QD / 154 / NEWS / 2017






## 100 மீற்றரில் தங்கம் வென்றார் அஷ்ரப்

08 »



## இன, மத முரண்பாடுகளால் நாட்டில் மீண்டும் சிவில் யுத்தம்

04 »

# வன்முறைகளின் பின்னணியில் பொதுபலசேனா

### இதுவரை 14 பேர் கைது

### பொலிஸ் பேச்சாளர் பிரியந்த ஜயக்கொடி



■ அ. அருண் பிரசாந்த்

நாட்டில் தற்போது இடம்பெறும் இனவாத செயற்பாடுகளின் பின்னணியில் பொதுபலசேனா அமைப்பினரே பிரதானமாக இருக்கின்றனர். இதுவரை கைது செய்யப்பட்டவர்களின் பெரும்பான்மையானவர்களும் அவ்வமைப்புடன் தொடர்புடையவர்களாகவே

07 »»»»»



## ஜூலை 01 முதல் பஸ்களுக்கு கடுமையான சட்டம்

தூர பிரதேச பொது மக்கள் போக்குவரத்து பஸ்களுக்கான சட்டத்தைக் கடுமையாக்க போக்குவரத்து அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.தூர இடங்களுக்குப் பிரயாணத்தில் ஈடுபடுத்தப்பட்டுள்ள பஸ்கள் உரிய நிறுத்தல் இடங்களில் அல்லாமல் நிறுத்தினால் குறித்த பஸ்களின் போக்குவரத்து அனுமதிப் பத்திரம் ரத்து செய்யப்படும் எனவும் அமைச்சர் கூறியுள்ளார்.

இந்நடவடிக்கை ஜூலை

07 »»»»»

## நான்கு மணிநேர சுற்றிவளைப்பில் 3241 நபர்கள் கைது

■ பீ.எப்.எம் றிஷாட்

நாடளாவிய ரீதியில் மேற்கொண்ட திடீர் தேடல் நடவடிக்கையில் 3241 பேர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.4 மணி நேரத்தில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

07 »»»»»



## சீனியின் விலையில் மாற்றம்




சர்வதேச சந்தையில் விலைகளில் மாற்றம் ஏற்பட்டுள்ளதால், நாட்டில் சீனியின் விலையிலும் மாற்றம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதன்படி 99 ரூபாவாக இருந்த ஒரு கிலோ சீனியின் விலை, 3 ரூபாவால் குறைந்து 96 ரூபாக குறைந்துள்ளதாக இறக்குமதியாளர் சங்கம் அறிவித்துள்ளது.

## கிறிஸ்தவ ஆலயங்கள் மீது தாக்குதல்

### லக்ஷான் டயஸ் கருத்தால் சர்ச்சை



மனித உரிமைகள் விவகார சட்டத்தரணி லக்ஷான் டயஸ் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றில் கடந்த காலத்தில் 166 கிறிஸ்தவ ஆலயங்கள் பௌத்த பிக்குகளால் தாக்கப்பட்டதாகத் தெரிவித்த கருத்து பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது.

சட்டத்தரணி லக்ஷான் தெரிவித்த கருத்து உண்மைக்குப் புறம்பானது என நீதி, புத்தசாசன அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ தெரிவித்துள்ளதோடு, 24 மணி நேரத்திற்குள் அதற்காக மன்னிப்புக் கோர வேண்டுமென்று கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக பேராயர் கார்டினல் மெல்கம் ரஞ்சித்திடம் தாம் விசாரித்ததாகவும் இவ்வாறான ஒரு சம்பவமும்

07 »»»»»

## செங்கோல் மீது கைவைத்தால் உறுப்பினருக்கு 8 வார தடை



### நிலையியல் கட்டளையில் விரைவில் மாற்றம்

■ அ. அருண் பிரசாந்த்

மூன்று தசாப்தங்களுக்குப் பின்னர் இலங்கைப்

07 »»»»»

## சிங்கள - முஸ்லிம் மோதலொன்றை கிழக்கில் உருவாக்க முயற்சி

கிழக்கு மாகாணத்தில் சிங்கள - முஸ்லிம் இன மோதலொன்றை உருவாக்குவதற்காக சிலர் செயற்படுவது தொடர்பில் உளவுத் துறை தகவல்கள் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

07 »»»»»

## சு.க. – ஐ.தே.க. உடன்படிக்கையை மீளாய்வு செய்ய திட்டம்





### அடுத்த கூட்டத்தில் ஆராய்வு

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்கும் ஐக்கிய தேசியக் கட்சிக்குமிடையிலான தேசிய அரசு தொடர்பாகச் செய்யப்பட்டுள்ள உடன்படிக்கையை மீளாய்வு செய்வது தொடர்பான கூட்டம் அடுத்த வாரம் நடைபெறவுள்ளது.

07 »»»»»

## பாகிஸ்தான் கருத்தரங்கில் மஹிந்த முக்கிய உரை

### இன்று பாகிஸ்தான் பயணம்



பாகிஸ்தான் தேசிய பாதுகாப்பு பல்கலைக்கழகத்தினால் நடத்தப்படும் 'தேசிய பாதுகாப்பும் யுத்தமும்' எனும் தலைப்பிலான கருத்தரங்கில் முக்கிய உரையாற்றுவதற்காக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ இன்று இஸ்லாமாபாத் பயணமாகிறார்.

பாகிஸ்தான் தேசிய பாதுகாப்புக்கான

07 »»»»»

## அரசுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் அடுத்த கூட்டம் திருமலையில்

### மஹிந்த தலைமையில் எதிரணியினர் பங்கேற்பு

பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் ஜனாதிபதியுமான மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான பொது எதிரணியின் அடுத்த அரச விரோத பொதுக் கூட்டம் திருகோணமலையில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

07 »»»»»

## மொறட்டுவ பல்கலையில் விரைவில் மருத்துவ பீடம்




மொறட்டுவை பல்கலைக்கழகத்தில் மருத்துவ பீடம் ஒன்றை ஆரம்பிப்பதற்கு பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

07 »»»»»

# வன்முறைகளை தூண்டிவிடுவோர் மீது தராதரம் பாராது தண்டனை வழங்கவும்

## கிழக்கு முதல்வர் ஹாபிஸ் நஸீர் கோரிக்கை





(எம்.ஏ.றமீஸ்)

இந்த நாட்டில் சிறுபான்மைச் சமூகத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் அச்சுறுத்தல்கள் நிறுத்தப்பட வேண்டும். குறிப்பாக முஸ்லிம் சமூகத்தினர் மீது மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைக் கலாசாரத்தினை தோற்றுவிக்கும் தரப்பினர் சட்ட ஒழுங்கிற்கு அமைவாக தராதரம் பாராது தண்டனை வழங்குகின்ற போது மட்டுமே சுபிட்சம் மிக்க சமாதானத்தினை இந்நாட்டில் தோற்றுவிக்க முடியும் என கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபிஸ் நசீர் அஹமட் தெரிவித்தார்.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் அட்டாளைச்சேனை மத்திய குழுவினரால் ஏற்பாடு செய்யப்பட்ட வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை(16) அட்டாளைச்சேனை தேசிய பாடசாலையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கிழக்கு மாகாண சுகாதாரத்துறை அமைச்சர் ஏ.எல்.எம்.நசீர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில், தொடர்ந்தும் அவர் கருத்துத் தெரிவிக்கையில், இந்த நாட்டில் உள்ள பெரும்பான்மைச் சமூகமும் சிறுபான்மைச் சமூகங்களும் நீண்ட காலமாக ஒற்றுமையாக வாழ்ந்து வரும் நிலையில் ஒரு சில இனவாதக் குழுக்கள் மட்டும் இந்த நாட்டைக் குட்டிச் சுவராக் குவதற்கு அனுமதிக்க முடியாது.

முஸ்லிம் சமூகத்தின் மீதான வன்முறைகள் கடந்த சில வருடங்களாக முஸ்லிம்களின் புனிதம் மிக்க ரமழான் காலத்தில் இடம்பெறுவதை யாவரும் நன்கு அறிவர். முஸ்லிம்கள் மீது வேண்டுமென்று மேற்கொள்ளப்பட்டு வரும் வன்முறைகள் நிறுத்தப்பட வேண்டும்.

சிறுபான்மைச் சமூகத்தினர் மீது இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டதன் விளைவாகத்தான் ஒட்டு மொத்த சிறுபான்மைச் சமூகத்தினரும் ஒற்றுமைப்பட்டு நல்லாட்சி அரசாங்கத்தை தோற்றுவித்தது.

முஸ்லிம் சமூகம் இந்த நல்லாட்சி அரசாங்கத்தின் மீது இன்னும் நம்பிக்கை வைத்திருக்கின்றது. முஸ்லிம் சமூகத்தின் மீது அச்சுறுத்தல்களைப் புரிகின்ற தரப்பினர் சட்ட ஒழுங்கிற்கு உட்படுத்தப்பட்டு குற்றவாளிகள் யாராக இருந்தாலும் தராதரம் பாராது தண்டிக்கப்பட வேண்டும். இவ்வாறான நிலை ஏற்படுத்தப்படுகின்றபோது மட்டுமே உண்மையான சமாதானம் இந்நாட்டில் ஏற்படும்.

இல்லாவிட்டால் ஒட்டுமொத்தமாக இந்த நாட்டைக் குட்டிச் சுவராக்குவதற்கு இங்குள்ள அரசியல் தலைமைகளும் உடந்தையாக இருக்கின்ற யதார்த்தத்தினை அவர்களால் ஒருபோதும் மறுக்க முடியாத நிலை தோன்றும் என்றார்.

இந்நிகழ்வின்போது சுகாதாரத்துறை பிரதி அமைச்சர் பைஷல் காசிம், கிழக்கு மாகாண சபை உறுப்பினர்களான ஏ.எல். தவம், ஆரிப் சம்சுதீன் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நிகழ்வினைத் தொடர்ந்து நகர திட்டமிடல் நீர் வழங்கல் அமைச்சின் மூலம் ஒதுக்கீடு செய்யப்பட்ட நிதியினைக் கொண்டு அட்டாளைச்சேனை பிரதான வீதியில் பொருத்தப்பட்ட நவீன மின்விளக்குகள் அதிதிகளால் அங்குரார்ப்பணம் செய்து வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## தக்வா ஜும்ஆ பள்ளிவாசலில் பயிற்சிப்பட்டறையும் சான்றிதழ் வழங்கலும்



(எம்.வை.அமீர், யூ.கே.காலிதீன் )

சாய்ந்தமருது தக்வா ஜும்ஆ பள்ளிவாசலில் இம்முறையும் கதீப் மற்றும் முஅத்தின்மார்களுக்கான சமய, சமூக பயிற்சிப்பட்டறையும் சான்றிதழ் மற்றும் உதவி வழங்கும் நிகழ்வு (18)ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தக்வா ஜும்ஆ பள்ளிவாசலின் செயலாளர் யூ.கே.காலிதீன் தலைமையில் இடம்பெற்றது.

நிகழ்வில் அகில இலங்கை ஜம்மியத்துல் உலமா சபையின் சாய்ந்தமருது கிளையின் தலைவர் அஷ்செய்க் எம்.எல்.சலீம் (ஷர்கி) வரவேற்புரை வழங்கினார். 'முன்மாதிரியான இமாமும் முஅத்தினும்' எனும் தலைப்பில் அஷ்செய்க் ஏ.எம்.நியாஸ் (பலாஹி) யும் 'அதானும் அதன் முறைகளும்' எனும் தலைப்பில் அஷ்செய்க் யு.எல்.அப்துல்லாஹ் ஜமால்(ஹிழ்ரி), பேஷ் இமாமும் 'கண்ணியமான இமாம்களும் முஅத்தின்மார்களும்' எனும் தலைப்பில் நிந்தவூர் அர் - றப்பானியா இஸ்லாமிய கற்கைகள் நிறுவனத்தின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்செய்க் ஏ.எம். அப்துல் ஹமீத் (அஸ்கனி)யும் விரிவுரைகளை வழங்கிய அதேவேளை, துஆ பிரார்த்தனையை லஹ்க் அரபிக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஷ்செய்க் ஏ.எல். எம்.ஹபீல் நிகழ்த்தினார்.

நிகழ்வின் இறுதியில் சான்றிதழ்களும் உதவிப்பொருட்களும் வழங்கி வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# இலஞ்சம் மற்றும் தரகு கோரும் அதிகாரிகளை ஓட ஓட அடித்துத்துரத்த வேண்டும்

பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார்



இலங்கையின் பல பாகங்களிலும் குப்பைகளை அகற்றும் விடயத்தில் லஞ்சமும் தரகும் கோரி கொள்ளையடிக்கும் பல அதிகாரிகள் இருப்பது தெரியவந்துள்ளது. இவர்களை ஓட ஓட அடித்து விரட்டினால் கூட அது பாவமில்லை என பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.மரிக்கார் கூறினார்.

மீதொட்டமுல்லையில் குப்பை மேடு சரிந்து விழுந்து உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு மேலதிக நட்டஈடு வழங்கும் நிகழ்வில் பேசும்போதே அவர் இவ்வாறு கூறினார். இவர்களுக்கு அரசாங்கம் வழங்கவுள்ள நட்டஈட்டுக்கு மேலதிகமாக அமைச்சர் கபீர் ஹாசிமிடம் மரிக்கார் விடுத்த வேண்டுகோளையடுத்து கபீர் ஹாசிமின் அமைச்சினூடாக மேலும் 50 லட்சம் ரூபா வழங்கப்பட்டது. இந்த தொகையை பாதிக்கப்பட்டவர்கள் மத்தியில் பகிர்ந்தளிக்கும் நிகழ்வு கொலன்னாவை பிரதேச செயலாளர் அலுவலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றபோது அதில் கலந்து கொண்டு உரை நிகழ்த்துகையிலேயே மரிக்கார் இவ்வாறு கூறினார்.

எதிர்பாராத ஒன்று நடந்து விட்டது. குப்பை மேட்டை அகற்றி அங்கு இயல்பான சூழலோடு வாழக்கூடிய ஒரு நிலையை உருவாக்கத்தான் நாங்கள் பாடுபட்டோம். நடந்தது இயற்கை அழிவோ தவறோ அல்ல. கடந்த அரசாங்கத்தினதும் இந்த அரசாங்கத்தினதும் முடிவுகளை எடுக்கும் நிலைப்பாட்டில் காணப்பட்ட மந்த கதியால்தான் நாம் எமது சகோதர சகோதரிகளை இழந்தோம்.இப்போது மீதொட்டமுல்லை பற்றி எவருமே பேசுவதில்லை யாரும் கண்ணீர் வடிப்பதும் இல்லை.கடந்த கால நிகழ்வுகளில் இருந்து நாம் படிக்க வேண்டிய பாடங்கள் நிறைய உள்ளன.

இந்த சம்பவத்தை அடுத்து அந்த மக்கள் மத்தியில் எழுந்த கோபமும் கொந்தளிப்பும் நியாயமானதே. கொலன்னாவை பிரதேச பிரதிநிதி என்ற வகையில் அவற்றுக்கு நல்டாடு கொடுக்கும் சக்தி என்னிடம் அவசியம் இருக்க வேண்டும். ஏனெனில் மக்களின் இந்தப் பிரச்சினைகளை தீர்த்து வைக்க கடைசி வரையில் முகம் கொடுக்க வேண்டியவன் நான்தான்.

இந்த சம்பவத்தின் பின் ஜனாதிபதியுடன் இடம்பெற்ற சந்திப்புக்களின் போது இவ்வளவு பேர் மரணமடைந்த பிறகாவது நாங்கள் சொல்லுவதை கொஞ்சம் கேளுங்கள் என்று அவரிடம் நான் கூறினேன். எங்களுடைய முதலாவது கோரிக்கை மீதொட்டமுல்லையில் மீண்டும் குப்பை கொட்ட வேண்டாம் என்பதாகத்தான் இருந்தது. அடுத்து ஏற்பட்ட மரணங்கள் இயற்கை அழிவாலோ அல்லது தெரியாமல் செய்த தவறுகளாலோ ஏற்பட்டதல்ல. மூன்றாவதாக நாம் முன்வைத்த கோரிக்கை இந்த குப்பைகளை மீள்சுற்றில் பாவிக்க கூடிய பொருளாதார கேந்திர நிலையமாக இந்த இடத்தை மாற்ற வேண்டும் என்பதாகும்.

அப்போதுதான் இறந்தவர்களின் ஆத்மா சாந்தியடைவதோடு அதிலிருந்து அரசுக்கும் சமூகத்திற்கும் ஒரு பாடத்தைக் கற்றுக் கொள்ள முடியும்.

கடைசியாக நாம் விடுத்துள்ள கோரிக்கை மீண்டும் குப்பை கூளங்கள் நிறைந்து இவ்வாறான ஓர் அழிவு ஏற்படக் கூடாது என்பதாகும். மீதொட்டமுல்லை குப்பைமேடு சரிந்ததும் மஹரகம கோட்டை கடுவெல ஆகிய இடங்களிலும் பிரச்சினைகள் தலைதூக்கின. கொழும்பு மாநகர சபையும் கொலன்னாவை நகர சபையும் தான் மீதொட்ட முல்லையில் குப்பைகளைக் கொட்டின. இப்போதுதான் ஏனைய இடங்களில் எவ்வாறு பிரச்சினைகள் தலைதூக்கின என்பது புரிகின்றது. 32 உயிர்களை பலியெடுத்த பின்னரும் குப்பைகளை வைத்து கொள்ளையடிக்கும் அதிகாரிகள் மக்களின் துன்பங்களை புரிந்து கொள்ளவில்லையென்றால் அவர்களை ஓட ஓட அடித்து துரத்துவதை விட வேறு என்னதான் செய்யமுடியும் எனவே துணிச்சலோடு சில நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதியிடமும்அரசாங்கத்திடமும் நாம் கேட்டுக் கொள்கின்றோம். - என்றார்.









இரத்தினபுரி மாவட்ட செயலாளர் திருமதி மாலனி லோகுபோதாகமவின் தலைமையில் பலரின் ஒத்துழைப்புடன் இரத்தினபுரி அலோசியஸ் பாடசாலை வளாகத்தில் நேற்று இடம்பெற்று வரும் டெங்கு ஒழிப்பு வேலைத் திட்டத்திற்கு குறித்த பாடசாலைக்கு அருகில் உள்ள பிரபல தமிழ் வர்த்தகர் உட்பட கிறிஸ்தவ பள்ளி மதகுருமார்கள் பலரும் எதிர்ப்பு தெரிவித்து பிரச்சினைகளில் ஈடுபட்டனர். அண்மையில் குறித்த பாடசாலையின் ஆசிரியை ஒருவர் டெங்கு நோயால் இறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

(எம்.எல்.எஸ்.முஹம்மத், இரத்தினபுரி)

# திண்மக்கழிவு முகாமைத்துவ தொழிலாளர்களுக்கான பயிற்சி வேலைத்திட்டம்





(கிண்ணியா நிருபர் )

கிழக்கு மாகாண உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைகள் அமைச்சு, கொழும்பு தேசிய திண்ம கழிவு முகாமைத்துவ உதவி நிலையம் ஆகியவற்றின் வழி காட்டலின் ஏற்பாட்டில் கிழக்கு மாகாண உள்ளூராட்சி திண்ம கழிவு முகாமைத்துவ கடமைகளுக்கு நியமிக்கப் பட்டுள்ள தொழிலாளர்களுக்கான பயிற்சி வேலைத் திட்டம் தொடர்பான செயலமர்வு கடந்த சனிக்கிழமை( 17) கிண்ணியா நகர சபை விருந்தினர் விடுதியில் ஆரம்பமானது.இச் செயலமர்வு எதிர் வரும் 18,19, 24, 25ஆம் திகதிகளில் காலை 9மணி முதல் மாலை 4 மணி வரை நடை பெற உள்ளதாக கிழக்கு மாகாண உள்ளூராட்சி திணைக்களத்தின் உள்ளூராட்சி ஆணையாளர் எம்.வை. சலீம் தெரிவித்தார்.

முதல் நாள் செயலமர்வில் குண்டகசாலை பிரதேச சபை திண்ம கழிவு முகாமைத்துவ பரிசோதகரும் கற்றாடல் உத்தியோகத்தருமான லலித் கே.ரம்தி லக்க வளவாளராக கலந்து கொண்டு விரிவுரையாற்றினார். மத்திய அரசாங்க உள்ளூராட்சி அமைச்சின் அபிவிருத்தி உத்தியோகத்தர்களான கிழக்கு மாகாணத்திற்கான இணைப்பாளர் எம்.ஆர். டீ. ஹேமகுமார, வட மாகாணத்திற்கான இணைப்பாளர் ஐ.ஜி.ஜே.பி. விக்ரமசிங்க மற்றும் திருமலை, மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த உள்ளூராட்சி மன்றங்களில் கடமை புரியும் தொழிலாளர்கள் இச் செயலமர்வில் கலந்து கொண்டனர். உள்ளூராட்சி மன்றங்களில் திண்ம கழிவுப் பிரிவில் கடமையாற்றுகின்ற 125 தொழிலாளர்களுக்கு தேசிய 3ஆம் நிலை தொழிலாளர் பயிற்சி சான்றிதழினை பெற்றுக் கொடுக்கும் முகமாக நடாத்தப் படும் பயிற்சி திட்டமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

# மிஸ்ரோ ஸ்ரீலங்காவின் வருடாந்த ஒன்றுகூடலும் இப்தாரும்






(எம்.வை.அமீர்)

முஸ்லிம் இளைஞர் சமூக ஆய்வு எனும் அமைப்பின் வருடாந்த ஒன்றுகூடலும் இப்தார் நிகழ்வும் சாய்ந்தமருது பரடைஸ் வரவேற்பு மண்டபத்தில் கடந்த சனிக்கிழமை அமைப்பின் தலைவர் எம்.ஐ.முஹம்மட் இக்தார் தலைமையில் இடம்பெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் பிரதித்தலைவரும் அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தலைவருமான கலாநிதி ஏ.எம்.ஜெமீலின் இணைப்பாளரும், அரச வர்த்தக கூட்டுத்தாபனத்தின் தொடர்பாடல் அதிகாரியுமான ஏ.எல்.ஜஹான் கலந்துகொண்டதுடன் தொழிலதிபர் முஹர்ரம் பஸ்மீர், இளைஞர் பாராளுமன்ற உறுப்பினர்களான எம்.எம்.டில்சாத் மற்றும் இசட்.எம்.சாஜித் ஆகியோர் கௌரவ அதிதிகளாகவும் கலந்துகொண்டனர். அஷ்ஷெய்க் எம்.எச்.எம்.றஹ்மாத்துல்லாஹ் (ஸஹ்தி) மார்க்க சொற்பொழிவாற்றினார்.

நிகழ்வுக்கு அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் சாய்ந்தமருது மத்திய குழுவின் உறுப்பினர்களும் பெரும் திரளான இளைஞர்களும் வருகைதந்து பங்குகொண்டனர்.











கொழும்பு டீ.எஸ். சேனாநாயக்க கல்லூரியின் இஸ்லாமிய மஜ்லிஸ் ஏற்பாடு செய்த வருடாந்த இப்தார் நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (16) கல்லூரி வளாகத்தில் நடைபெற்றது. ஐக்கிய அரபு இராச்சியத்தின் அனுசரணையில் கல்லூரியின் அதிபர் ஆர்.எம்.எம்.ரத்னாயக்க தலைமையில், பாடசாலையின் தமிழ்ப்பிரிவுத் தலைவி நஸ்லிமா அமீன் ஆசிரியையின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த இப்தார் நிகழ்வில், அமைச்சர் ஏ.எச்.எம். பௌஸி பாராளுமன்ற உறுப்பினர் முஜீபுர் ரஹ்மான், கல்வி அமைச்சின் முஸ்லிம் பிரிவின் பணிப்பாளர் தாஜுதீன் உட்பட ஆசிரியர்கள், பெற்றோர்கள், மாணவர்கள் ஊடகவியலாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர். நிகழ்வில் பிர்தௌஸ் மௌலவியால் பயான் மற்றும் துஆப் பிரார்த்தனையும் செய்யப்பட்டது.

(எம்.எஸ்.எம்.ஸாகிர், ஜெஷ்ஷான் அஹம்மட்)

# கௌரவமான பதவி வகித்த தமிழரை வீட்டுக்கு அனுப்புவது பொருத்தமல்ல

**காதர் மஸ்தான் எம்.பி.**



அண்மைக்காலமாக வட மாகாண சபைக்குள் நிலவிவரும் குழப்ப நிலையும் அதன் பின்னரான தீமானங்கள் மூலம் மாகாணசபைக்குள் ஏற்பட்டிருக்கும் பிளவும் தமிழ் பேசும் சமூகத்தின் எதிர்கால அரசியல் இருப்பை கேள்விக்குறியாக்கி இருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட அபிவிருத்திக்குழு இணைத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

வட மாகாண சபையில் ஏற்பட்டிருக்கும் குழப்ப நிலை தொடர்பாக தமது நிலைப்பாட்டை அறிவிக்கும் வகையில் ஊடகங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

குறித்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,


தமிழ் பேசும் மக்களின் பாரிய எதிர்பார்ப்புக்களுடன் உருவாக்கப்பட்ட இந்த வட மாகாண சபை ஊழலற்றதாக இருக்க வேண்டும் என்பது அனைவரினதும் எதிர்பார்ப்பாகும் எனவே முதலமைச்சர் என்ற வகையில் அவர் தனது கடமையை செய்திருக்கின்றார் மேலும் அதனையே மக்களும் விரும்புகின்றனர்.

அதே நேரத்தில் வட மாகாண சபைக்கு முதலமைச்சராக விக்னேஸ்வரன் அவர்களே பதவி வகிக்க வேண்டும் ஏனெனில் நாட்டில் சிறுபான்மையாகவும் வடக்கில் பெரும்பான்மையாகவும் வாழும் தமிழ், முஸ்லிம் மக்கள் சார்பாக எடுக்கப்படும் எதிர்கால நலன் கருதிய தீர்மானங்களுக்கு என்னைப் பொறுத்த வரையில் மாகாண சபைக்கு சிறந்த தலைமைத்துவத்தை கொண்ட முதலமைச்சராக விக்னேஸ்வரன் அவர்களே காணப்படுகின்றார்.

மேலும் கடந்த காலங்களில் நாட்டில் மிக முக்கியமான கௌரவமான பதவி வகித்த தமிழர் ஒருவரை தமிழ் சமூகமே வீட்டுக்கு அனுப்புவது பொருத்தமான ஒன்றல்ல. குற்றம் யார் இழைப்பினும் அவர்களுக்கு உரிய தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதில் எந்த மாற்றுக்கருத்தும் இல்லை அந்த வகையில் முதலமைச்சர் தன் கடமையை சரிவர செய்திருக்கின்றார் என்றே கருதுகின்றேன் அத்துடன் முதலமைச்சரின் நடவடிக்கை ஏனைய மாகாணங்களுக்கும் ஒரு முன்னுதாரணமாகும்.

என்னுடைய ஆரம்பமும் வடக்கில் ஊழலுக்கு எதிரான அரசியல் பிரவேசமாக காணப்படுவதை மக்கள் அறிவர் அந்த வகையில் மாகாண சபை அமைச்சர்கள்மட்டுமட்டுமன்றி மத்திய அரசில் அங்கம் வகிக்கும் அரசியல்வாதியாக இருந்தாலும் ஊழல் குற்றச்சாட்டுடன் தொடர்புபட்டிருப்பின் அவர்கள் மீது உரிய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட வேண்டும் என்பதுடன் தவறிழைத்தவர்களுக்கு தண்டனைகளை வழங்கப்படக்கூடாது என்பதிலும் நான் உறுதியாக இருக்கின்றேன். இதுவே மக்களினதும் புத்திஜீவிகளினதும் எதிர்பார்ப்பாகும்.

அத்துடன் இந்த மாகாணசபை குழப்பநிலை காரணமாக மக்கள் மத்தியில் பெரும் அதிருப்தி நிலை ஏற்பட்டுள்ளது எனவே சம்பந்தப்பட்ட தமிழ் சமூகத்தின் தலைவர்களும் மக்கள் பிரதிநிதிகளும் இந்த விடையத்தில் ஒரு சில விட்டுக்கொடுப்புடன் செயற்பட்டு மீண்டும் நாம் ஒற்றுமையான தமிழ் பேசும் சமூகம் என முன்னுதாரணம் காட்டுவதற்கு ஒரே கரையின் கீழ் ஒன்றிணையுமாறு தாம் வேண்டுகோள் விடுப்பதாக அவர் தனது அறிக்கையில் மேலும் தெரிவித்துள்ளார்.




ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன நேற்றுமுன்தினம் அங்கொடை ஐ.ஈ.ஏ. காய்ச்சல் மருத்துவமனைக்கு கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார். இதன்போது குறித்த மருத்துவமனையில் உள்ள குறைபாடுகளை உடனடியாக தீர்க்குமாறு ஜனாதிபதி குறித்த அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி குறித்த மருத்துவமனையில் சிகிச்சை பெறும் சிறுமிகளைப் பார்வையிடுவதைப் படங்களில் காணலாம்.

# தனியார் வைத்தியசாலைகளின் கட்டணங்களை குறைக்க முடிவு



தனியார் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக தங்கும், பரிசோதனை ஆகியவற்றிற்கான கட்டணங்களை ஒழுங்குபடுத்த உள்ளதாக சுகாதாரத் துறை அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறியுள்ளார்.

தனியார் வைத்தியசாலைகளை ஒழுங்குபடுத்தும் சட்டத்தின் கீழ் உள்ள அதிகாரத்தின் படி அது தொடர்பாக நடவடிக்கை எடுப்பதற்கு சுகாதாரப் பணிப்பாளர் நாயகத்திற்கு ஆலோசனை வழங்கியுள்ளதாக சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன கூறினார். நேற்றுமுன்தினம் அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைக் கூறினார்.

முழு இரத்தக் கொள்ளளவு (FBC) பரிசோதனைக்கு 800-900 ரூபா வரை அறவிடுவதாகவும், அதனை 250 ரூபா வரை குறைக்க முடியும் என்றும் டெங்கு நோய்க்காக செய்கின்ற அன்டிஜன் பரிசோதனைக்காக 4000 ரூபா வரை அறவிடுவதாகவும், அதனை 1000 ரூபா வரை அதிகரிக்க முடியும் என்றும் அமைச்சர் கூறினார். அதன்படி தனியார் வைத்தியசாலைகளின் அதிகாரிகளுடன் கலந்துரையாடி இன்றைய தினம் உரிய நடவடிக்கை எடுப்பதாக அவர் கூறினார்.

இதேவேளை இந்த ஊடக சந்திப்பில் கலந்து கொண்ட விஷேட வைத்திய நிபுணரிடம் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கும் போது, டெங்கு நோயாளர்களுக்கு வலி நிவாரண மருந்து வழங்குவது தவிர்க்கப்பட வேண்டும் என்று கூறினார். பெரசிடமோலைத் தவிர வலி நிவாரண மருந்து வழங்குவது உயிராபத்தை ஏற்படுத்தும் என்றும், சில வைத்தியர்கள் இதனை வழங்குவதாகவும், இந்த வைத்தியர்கள் தொடர்பில் தகவல் கிடைத்தால் விசாரித்து நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் கூறினார்.

# முச்சக்கரவண்டி கட்டண அதிகரிப்பில் மாற்றங்கள் இல்லை

முச்சக்கரவண்டியின் கட்டணம் எதிர்வரும் ஜூலை 10 ஆம் திகதி முதல் அதிகரிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, கிலோமீட்டருக்கு தற்போது அறவிடப்படும் கட்டணம் 10 ரூபாவால் அதிகரிக்கப்பட உள்ளதாக முச்சக்கர வண்டி சாரதிகள் சங்கம் அறிவித்துள்ளது.



இந்நிலையில், எந்த காரணத்திற்காகவும் முச்சக்கர வண்டியின் கட்டண சீர்திருத்தங்கள் தற்போதைய நிலையில் மேற்கொள்ளப்படமாட்டாது என இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

அரசாங்கத்தை நெருக்கடிக்குள் தள்ள சில முச்சக்கர வண்டிகளின் சங்கம் கட்டணங்களை அதிகரிக்க தீர்மானித்துள்ளதாக இலங்கை முச்சக்கர வண்டி சாரதிகள் மற்றும் உரிமையாளர்கள் சங்கத்தின் இணைப்பாளர் சுதில் ஜயருக் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், முச்சக்கர வண்டிகளில் உதிரிபாகங்களில் விலை அதிகரிப்பு மற்றும் பல பிரச்சினைகள் காரணமாக முச்சக்கர வண்டியின் முதல் கிலோ மீற்றருக்கான கட்டணம் அடுத்த மாதம் 10ஆம் திகதியில் இருந்து 10 ரூபாவினால் அதிகரிக்கப்படும் என இலங்கை சுயதொழில் வாய்ப்பு தொழிலாளர்களின் முச்சக்கர வண்டி சங்கத்தின் தலைவர் சுனில் ஜயவர்தன நேற்றுமுன்தினம் அறிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# நுகேகொடையில் தலையற்ற பெண்ணின் சடலம் மீட்பு

**காதலன் கத்தியுடன் சரண்**



நுகேகொடை, பழைய கெஸ்பேவ வீதியிலுள்ள விளையாட்டு மைதானத்திற்கு அருகில் பெண் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

குறித்த பெண்ணின் சடலம் சிரச்சேதம் செய்யப்பட்ட நிலையில் நேற்றுமுன்தினம் இரவு 8 மணியளவில் மீட்கப்பட்டுள்ளதாக நுகேகொடை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸாருக்குக் கிடைத்த தகவலை யடுத்து சம்பவ இடத்தில் தேடுதல் நடத்தியபோது, குறித்த சடலமும் கொலைக்குப் பயன்படுத்தியதாகக் கூறப்படும் கத்தியொன்றும் மீட்கப்பட்டுள்ளது

குறித்த பெண்ணின் காதலனினால் இந்த கொலை செய்யப்பட்டுள்ளது. பின்னர் அவர் கொலைக்கு பயன்படுத்திய கத்தியுடன் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்துள்ளார்.

குறித்த பெண்ணை மோட்டார் சைக்கிளில் ஏற்றி கொண்டு கெஸ்பேவ பழைய வீதிக்கு அழைத்து சென்ற காதலன், அங்கு வைத்து கொலை செய்துள்ளார். மத்துகம, ஹெவெஸ்ஸ பிரதேசத்தை சேர்ந்த பிரியங்கா சங்கல்பத்தி குணசிங்க என்ற இளம் பெண்ணே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார். அவரது சடலம் இதுவரையில் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

பிரேத பரிசோதனை நேற்று இடம்பெற்றதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, சிலாபம் குமாரகட்டுவ பிரதேசத்தில் 53 வயதான ஒருவர் கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார். சந்தேகநபர் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவர் அந்த பிரதேசத்திலிருந்து தப்பிச் சென்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கில் 5 கோடி ரூபா கேரளா கஞ்சா மீட்பு



கடந்த இரண்டு நாட்களுள் கிளிநொச்சி மற்றும் மன்னார் மாவட்டங்களில் 5 கோடி ரூபாய் பெறுமதியான கேரள கஞ்சா மீட்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதன் நிறை 402 கிலோ என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மீனவ படகில் கிளிநொச்சிக்கு கொண்டு வரப்பட்ட 260 கிலோ கிராம் நிறையுடைய ஒரு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சாவுடன் சங்குப்பிட்டி பகுதியில் வைத்து ஒருவர் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டடார். இவர் நீண்ட காலமாக இந்தியாவில் இருந்து கேரள கஞ்சாவை நாட்டிற்கு கொண்டு வந்து, கொழும்பு மற்றும் அதனை அண்டிய பகுதிகளில் விநியோகித்துள்ளமை விசாரணைகள் மூலம் வெளிப்பட்டுள்ளது. யாழ்ப்பாணம், மானிப்பாயில் உள்ள அவரது வீட்டில் இருந்தும் 12 கிலோ கிராம் கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இந்நிலையில், கடந்த வெள்ளிக்கிழமை மன்னார் கடற்பரப்பில் 142 கிலோ கிராம் நிறையான சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, கேரளா கஞ்சாவுடன் சந்தேகநபர்கள் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளதுடன், அவர்களது மோட்டார் சைக்கிளையும் பறிமுதல் செய்துள்ளதாக பூநகரி பொலிஸார் மற்றும் கடற்படை தலைமை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் மிக நீண்டகாலமாக இந்த வர்த்தகத்தை முன்னெடுத்து வந்துள்ளமை ஆரம்பக் கட்ட விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

# முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் இப்தார்



(எம்.எஸ்.எம். ஸாகிர்)

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நடத்திய இப்தார் நிகழ்வு கொழும்பு - 07, விஜேராம மாவத்தையில் உள்ள அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் கடந்த வியாழன்று (15) நடைபெற்றது.

அவரது உத்தியோகபூர்வ இல்லத்தில் முதன்முறையாக நடத்திய இந்த இப்தாரில் இலங்கையிலுள்ள பலஸ்தீன், ஈரான், ஈராக், துருக்கி, பாகிஸ்தான், பங்களாதேஷ், ஓமான், ஐக்கிய அரபு இராச்சியம் ஆகிய நாடுகளிலுள்ள வெளிநாட்டுத் தூதுவர்கள், உலமாக்கள், முஸ்லிம் இயக்கங்களின் பிரதிநிதிகள், சட்டத்தரணிகள், முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மற்றும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அரசியல்வாதிகள் என சுமார் 300 பேர் கலந்து கொண்டனர். முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷ, அம்பாந்தோட்டைப் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பஷில் ராஜபக்ஷ உட்பட பொதுஜன எக்சத் பெரமுன முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

முன்னாள் அமைச்சர் ஏ.எச்.எம். அஸ்வர், முஸ்லிம் முற்போக்கு முன்னணியின் அமைப்பாளர் அப்துல் சத்தார், இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன முன்னாள் தலைவர் ஹட்சன் சமரசிங்க ஆகியோரும் இதில் உரையாற்றினர்.

மஷ்றும் ஏ. காதரின் பாடல் ஒன்று நிகழ்வில் இடம்பெற்றதோடு, நிகழ்வை முன்னாள் முஸ்லிம் சேவைப்பணிப்பாளர் அஹ்மத் எம். முனவ்வர் தொகுத்து வழங்கினார்.

NAVAMANI DAILY
நவமணி

FREELANKA MEDIA LTD.
156, Hospital Road, Kalubowila, Dehiwala.
Telephone: 011 7393880 - 1/2 Fax: 011 7393883
E-mail: editornavamani@gmail.com
freelankamedia@gmail.com

19TH JUNE 2017 - MONDAY

# எப்போது முடியும் வட மாகாண சர்ச்சை?

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட வட மாகாண சபையின் சில அமைச்சர்கள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் காரணமாக, வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன் எதிர்கொண்டு வருகின்ற விமர்சனங்களும், அவருக்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணை சர்ச்சையும் நீண்டு கொண்டே செல்வது அவதானிக்கப்படுகின்றது.

இலங்கையில் அதிகாரப் பரவலாக்கம் வேண்டும் என்ற கோசங்கள் எழும்பி, அதன் ஆரம்ப கட்டமாக மாகாண சபைகள் ஸ்தாபிக்கப்பட்டு, வரலாற்றில் முதற் தடவையாக வட மாகாண சபைத் தேர்தல் நடாத்தப்பட்டு, தமிழர்கள் ஆட்சிக்கு வந்து முதற் தவணை முடிவடையும் முன்னரே இவ்வாறான ஒரு சர்ச்சை ஏற்பட்டிருக்கின்றமை கவலை தருகின்றது.

இலங்கை அரசியல்வாதிகளில் ஊழல் செய்கிறார்கள் என்ற நம்பிக்கை இந்த நாட்டு மக்கள் மத்தியில் பரவலாக இருக்கின்ற நிலையில், அவற்றுக்கெதிராக யாருமே நடவடிக்கை எடுப்பதில்லை என்ற ஆதங்கமும் மக்கள் மத்தியில் நிலவுகின்றது. இவ்வாறான நிலையில், வடக்கு முதலமைச்சரின் நடவடிக்கை பாராட்டுக்குரியதாகும்.

வடக்கு மாகாண சபையின் அமைச்சர்கள் மீதான குற்றச்சாட்டுக்களை விசாரிப்பதற்காக முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனால் நியமிக்கப்பட்ட விசாரணைக் குழு தனது அறிக்கையில் இரு அமைச்சர்கள் பதவி விலக வேண்டும் என்று பரிந்துரைத்துள்ளது.

கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சர் தம்பிராசா குருகுலராசா மற்றும் விவசாயமும் கமநல சேவைகளும் கால்நடை அபிவிருத்தி நீர்ப்பாசன கட்டுறவுத்துறை மற்றும் சுற்றாடல் அமைச்சர் பொன்னுத்துரை ஐங்கரநேசன் ஆகியோரையே பதவி விலக வேண்டும் என்று அந்த அறிக்கை பரிந்துரைத்துள்ளது.

ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்ட வட மாகாண சபை அமைச்சர்கள் தொடர்பில் குழு அமைத்து விசாரணை மேற்கொண்டதே வடக்கு முதலமைச்சர் செய்த மிகப் பெரும் வீரதீரச் செயலாக பார்க்கப்பட வேண்டும். ஏனெனில், எந்தவொரு அரசியல்வாதியும் அவ்வாறு செய்வதில்லை.

இந்நிலையில், 04 அமைச்சர்கள் தொடர்பில் விசாரணை மேற்கொள்ளப்பட்டு இரு அமைச்சர்கள் ஊழல் செய்திருக்கிறார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டு, அவர்களை இராஜினாமா செய்யுமாறு கோரப்பட்டுள்ளது. ஆனால், சுகாதார அமைச்சர் ப. சத்தியலிங்கம் மற்றும் அமைச்சர் பா. டெனீஸ்வரன் ஆகியோர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படாததனால் குற்றச்சாட்டுக்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர்.

இப்போது இந்த விவகாரத்தை வைத்து முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரனுக்கு எதிரான பிரசாரங்களையும், கண்டனங்களையும் அவரது குழுவைச் சேர்ந்தோரே முடுக்கி விட்டுள்ளனர். உண்மையில், நீண்ட கால ஒடுக்குதலுக்கு பின்னர் மாகாண சபையிலேனும் அதிகாரத்தைப் பிடிக்க முடிந்த தமிழ்ச் சமூகத்துக்கு இது அவ்வளவு நல்லதல்ல.

எனவே, இந்த உட்கட்சி மோதலை விரைவில் முடிவுக்கு கொண்டு வருவதற்கு சம்பந்தப்பட்ட தரப்புக்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். வடக்கு முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பெரும்பாலான புள்ளிகளுக்கும் இடையில் ஒரு மங்கலான பனிப்போர் நிகழ்ந்து வருகின்றமை நாமறிந்ததே. ஆனால், அது முடிவுக்கு கொண்டு வரப்பட வேண்டும்.

இந்த நாட்டில் நீண்ட காலமாக உரிமை மறுக்கப்பட்ட நிலையிலிருந்த தமிழ் சமூகம் சற்று தலைதூக்கி அதிகாரங்களை அடைந்து வர முயற்சிக்கின்ற நிலையில், இந்த உட்கட்சி முரண்பாடுகளும், மோதல்களும் இல்லாமலாக்கப்பட வேண்டும். அதுதான் தமிழ் சமூகத்துக்கு தமிழ் அரசியல்வாதிகள் செய்யும் நன்மையாக அமையும்.

---



# இன, மத முரண்பாடுகளால் நாட்டில் மீண்டும் சிவில் யுத்தம்

டெரன்ஸ் புரசிங்க
சிரேஷ்ட விரிவுரையாளர்,
ஸ்ரீஜயவர்தனபுர பல்கலைக்கழகம்

இலங்கை ஒரு பல்லின, பல்மத நாடாகும். இந்த நாட்டில் முன்னேற்றமில்லாத பொருளாதார, அரசியல் நிலையே இன்னும் காணப்படுகின்றது. இலங்கை ஒரு காலனி நாடாக இருந்தமை இதற்கான காரணங்களில் ஒன்றாகும். அக்காலத்தில் ஏற்படுத்தப்பட்ட மாற்றங்கள் காரணமாக, நம் நாட்டில் தேசிய மற்றும் மத ரீதியான பிரச்சினைகள் உருவெடுத்துள்ளன. பிரித்தாளும் திட்டத்தின்படியே பிரித்தானிய ஆட்சியாளர்கள் இலங்கையை ஆட்சி செய்தனர். அதற்காக, பெரும்பான்மையினர் (சிங்களவர்) பாதிப்படையும் வகையிலான சலுகைகளை சிறுபான்மையினருக்கு வழங்கினர். எனவே, சிங்கள பெரும்பான்மையினர் பிரித்தானியரை வெறுக்காது சிறுபான்மையினரை வெறுத்தனர்.

எனவே, இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர், இலங்கையில் ஒரு தேசிய அரசு ஸ்தாபிக்கப்படவில்லை. இதனால், சுதந்திரத்துக்குப் பின்னைய இலங்கையில் தேசியவாதம் உறுதிப்படுத்தப்படவில்லை. அரசியல் பலமும் அதிகாரமும் சிங்கள பௌத்த சக்திகளுக்கே கிடைத்தன. இதற்கு இணையாக தமிழ், முஸ்லிம் சிறுபான்மை சக்திகள் அதிகாரத்தைப் பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இருக்கவில்லை.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் இனவாத, மதவாத பிரச்சினைகள் எழுந்தன. பெரும்பான்மை சமூகத்தின் அதிகாரம் நிலவுகின்றபோது, அதனை சிறுபான்மையினங்கள் எதிர்ப்பதுதான் விளைவு. இதனை தடுக்க முடியாது. இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அரசியல் அதிகாரம் சிங்கள பௌத்த சக்திகளிடம் கிடைத்தல் மற்றும் சிறுபான்மையினர் அரசியல் அதிகாரத்தை பெற்றுக்கொள்வதற்கான வாய்ப்புக்கள் இல்லாமலாக்கப்பட்டதன் பின்விளைவுதான், 30 வருட கால சிவில் யுத்தமாகும். இந்த யுத்தத்தை இராணுவ பலம் கொண்டு முடிவுக்குக் கொண்டுவந்தபோதும், தேசிய பிரச்சினைக்கான உண்மையான தீர்வு கிடைக்காமையின் ஒரு விளைவாகவே, மதவாத பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் ஐ.தே.க. மற்றும் சுதந்திரக் கட்சிகள் அமைந்த அரசாங்கங்களின் அடிப்படையாக இருந்ததும், இருக்கப்போவதும் சிங்கள பௌத்த தேசியவாத சக்திகளாகும். எனவே, இந்த இரு பிரதான கட்சிகள் மட்டுமன்றி சிறு கட்சிகள் சிங்கள பௌத்த சக்திகளின் மனங்களை வெல்லவே முயற்சிக்கின்றன. இதற்கு மாற்றீடாக ஏனைய இன, மத குழுக்கள் அணிதிரள்கின்றன. இலங்கை 1948 இல் சுதந்திரமடைந்ததன் பின்னர் உருவான முதலாவது தேசிய அரசியலமைப்பு 1972 குடியரசு அரசியலமைப்பாகும். அதில் சிங்கள மொழியும் பௌத்த மதமும் உள்ளடக்கப்பட்டிருந்தன. எனவே, சிங்கள மொழிக்கும் பௌத்த மதத்துக்கும் அரச அனுசரணையும் பாதுகாப்பும் கிடைத்தன. இது மிகவும் முக்கியமான விடயமாகும். அதேநேரம், இது ஹாஸ்யமானதாகவும் இருக்கின்றது.

இங்கு எழுகின்ற கேள்வி, பௌத்த மதத்தை யாரிடமிருந்து பாதுகாக்க வேண்டும் என்பதாகும். ஏனெனில், சுதந்திரத்திற்குப் பின்னைய இலங்கையில் அதிகாரமிருப்பது சிங்கள பௌத்த சக்திகளிடமாயின், எந்தத் தரப்புகளிடமிருந்து பௌத்த மதத்துக்கு அச்சுறுத்தல் ஏற்படும்? எனவே, இது கேலிக்குரியதாகும். மற்றைய விடயம் என்னவென்றால், பௌத்த மதத்தை அரசியலமைப்பில் இணைத்து, அதற்கு பிரதான இடம் வழங்கப்பட்டிருப்பதனால், சிறுபான்மையினர் பின்பற்றுகின்ற மதங்கள் இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படுகின்றன. இது ஒரு நாட்டின் ஐக்கியத்தைப் பாதிக்கின்றது. ஏனெனில், பல்வேறு மதங்களைப் பின்பற்றுகின்ற இனத்தவர் வாழ்கின்ற ஒரு நாட்டில், ஒரு மதத்துக்கு மட்டும் அரச அனுசரணையை வழங்கும்போது ஏனைய மதங்கள் அரச அனுசரணையிலிருந்து ஒதுக்கப்படுகின்றன.

இதனால், இவ்வாறு இரண்டாம் நிலைக்குத் தள்ளப்படும் மதங்களைப் பின்பற்றுவோர் தாம் இரண்டாம் தரப் பிரஜைகளோ என சிந்திக்கத் தொடங்குகின்றனர். இந்த நிலை மொழி மற்றும் இனம் தொடர்பிலும் எழும். இதன் மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கு இடைஞ்சல் ஏற்படும். அத்தோடு சிறுபான்மை இனக் குழுக்கள் அரசிலிருந்து நீங்கிச் செல்ல முயற்சிக்கும். கடந்த காலத்தில் நாம் பெற்ற அனுபவமும் அதுதான். இந்த சிவில் யுத்தத்துக்கான காரணமாக அமைந்த பிரதான விடயங்களை, சிங்கள பௌத்த பெரும்பான்மை தேசியவாத சக்திகள் இன்னும் கோரிய வண்ணமே இருக்கின்றன. இது அறிவற்ற செயலாகும்.

கடந்த சில தினங்களில் சிறுபான்மையினருக்குச் சொந்தமான சில வியாபார நிலையங்கள் மற்றும் மதஸ்தலங்கள் மீது தாக்குதல்கள் நடாத்தப்பட்ட செய்திகள் ஊடகங்களில் வெளிவந்தன. அத்தோடு, இந்த தாக்குதல் சம்பவங்களுடன் பொதுபல சேனா அமைப்புக்கு தொடர்பிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இந்த அமைப்பு உள்ளிட்ட இன்னும் சில இவ்வாறான தீவிரவாத அமைப்புக்களை போஷித்தது முன்னாள் அரசாகும். அது மட்டுமன்றி முன்னாள் அரசின் முக்கியமான சில உறுப்பினர்கள் அந்த அமைப்புக்களுடன் தொடர்புபட்டு செயற்பட்டுள்ளனர். அன்று செயற்பட்ட அந்த தீவிரவாத சக்திகள், இந்த அரசின் கீழும் செயற்பட்டு வருவதாகத் தெரிகின்றது. ஆனாலும், 2015 ஜனவரியில் நடைபெற்ற அரசியல் மாற்றத்தின் பின்னர் இந்தக் குழுக்களுக்கு அரச அனுசரணை கிடைக்கவில்லை. ஆனால்,



அரசு அமைதியாக இருப்பதனால் இந்தக் குழுக்கள் பலமடைந்துள்ளன.

இந்த அரசு நாட்டில் ஜனநாயகம், சுதந்திரத்தை ஸ்தாபிக்கும் விடயத்தில் உயர் நிலையில் இருந்தாலும், முன்னாள் அரச காலத்தில் குற்றமிழைத்தவர்களுக்கும், குற்றமிழைத்த குழுக்களுக்கும் எதிராக சட்டத்தை நடைமுறைப்படுத்தல் தொடர்பில் தோற்றுப்போயுள்ளதாகத் தெரிகின்றது. இது இந்த அரசின் பிரதான பலவீனமாகும். இவ்வாறான நிலையில் இந்த அரசை அதிகாரத்துக்கு கொண்டு வருவதற்காக உழைத்த மக்கள் அச்சமடைந்துள்ளனர். ஏனெனில், தோற்றுப்போன அரசு மீண்டும் அதிகாரத்துக்கு வந்தால், தாம் மீளவும் அடக்குமுறைக்கு உட்படலாம் என்ற அச்சம் அவர்களிடம் நிலவுகின்றது.

இந்த அரசானது தீவிரவாத கருத்துக்களை வெளியிடுகின்ற சிறுபான்மை அரசியல்வாதிகள் தொடர்பில் சட்டத்தை செயற்படுத்துவதில்லை என்று தெற்கில் செயற்படும் இவ்வாறான தீவிரவாத குழுக்கள் அரசுக்கு குற்றம் சாட்டுகின்றன. வடக்கிலுள்ள சில அரசியல்வாதிகள் தீவிர கருத்துக்களை வெளியிடுகின்றபோதும், சிறுபான்மையினங்கள் அவற்றை அங்கீகரிப்பதில்லை. ஏனெனில், சிறுபான்மையினத்தவர் மீண்டுமொரு இன முரண்பாட்டில் சிக்கிக்கொள்ள விரும்புவதில்லை. சிங்கள பெரும்பான்மையினருடன் அதிகாரத்தைப் பகிர்ந்துகொண்டு வாழவே சிறுபான்மையினர் விரும்புகின்றனர். வடக்கு மக்களைப் போன்றே தெற்கு மக்களுக்கும், நாட்டில் நல்லிணக்கத்தை கட்டியெழுப்பும் தேவை உள்ளது. அதற்கு தடையாக இருக்கின்ற கடும்போக்குவாதிகள் தெற்கில் போன்று வடக்கிலும் இருக்கலாம். ஆனாலும் இந்த இரு தீவிரவாத குழுக்களுக்கும் இடையில் தெளிவான ஒரு வேறுபாடு உள்ளது. அதாவது, வடக்கு கடும்போக்கு குழுக்கள் தீவிர கருத்துக்களை வெளியிட்டபோதும், அவை இன்னும் தீவிரவாத நடவடிக்கைகளை ஆரம்பிக்கவில்லை. ஆனால், தெற்கு தீவிரவாதிகள் தீவிர கருத்துக்களுக்கு அப்பால் சென்று செயற்படும் நிலைமையை காணக்கூடியதாக உள்ளது.

கடந்த சில தினங்களில் சிறுபான்மை இனத்தவர்களுக்கு சொந்தமான சில வியாபார நிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட தீவிரவாத குழுவின் தலைவரை இன்னும் கைது செய்யவில்லை. வடக்கில் சில அரசியல்வாதிகள் தீவிர கருத்துக்களை வெளியிடுகின்றபோதும், அங்குள்ள மக்கள் அவற்றை அங்கீகரிப்பதோ அல்லது தீவிரவாத நடவடிக்கைகளில் ஈடுபடுவதோ இல்லை. மாறாக, தமது நிலத்தில் ஜனநாயக ஆட்சியை ஸ்தாபித்து, சிங்கள மக்களுடன் நல்லிணக்கத்துடன் வாழ வேண்டும் என்பதுவே அந்த மக்களின் தேவையாக உள்ளது. சிங்கள மக்களது விருப்பத்துடன் ஓரளவு அதிகாரப் பகிர்வை மேற்கொள்வதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாக உள்ளது. எனவே, வடக்கில் தீவிர கருத்துக்களை வெளியிடுகின்றவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவதில்லை என்ற கருத்துக்கள் செல்லாக் காசாகிப் போகின்றன.

ஆனாலும், தெற்கில் பெருமளவு மதவாத வன்முறை நடைபெறுவதனால் சட்டத்தை செயற்படுத்த வேண்டியது தெற்கிலாகும். தெற்கில் செயற்படும் பொது பல சேனா என்ற கடும்போக்கு குழுவின் பின்னால் ஜாதிக ஹெல உறுமய இருப்பதாக சிலர் கருத்து தெரிவிக்கின்றபோதும், நான் அதனை நம்பவில்லை. ஏனெனில், ஜாதிக ஹெல உறுமயவும் இப்போதைய கூட்டு அரசாங்கத்தில் பங்காளியாக உள்ளது. ஆனால், அரசிலுள்ள சில அமைச்சர்கள் தனிநபர் தொடர்பு காரணமாக இந்த அமைப்புக்கு உதவுவதாக இருக்கலாம்.

இப்போது உருவாகியுள்ள இந்த இனவாத, மதவாத வன்முறைகளை கட்டுப்படுத்தாவிட்டால் நாட்டில் மீண்டும் சிவில் யுத்த நிலைகூட ஏற்படலாம். பௌத்த தீவிரவாத சக்திகள் வளர்கின்ற அளவுக்கே முஸ்லிம் தீவிரவாத சக்திகளும் வளர்கின்றன. இந்த நிலைமை கட்டுப்படுத்த அரசு முன்வராதபோது, நாட்டில் மனித உரிமை மீறல்கள் நடைபெறுவது தொடர்பில் மீண்டும் சர்வதேச தளத்தில் பேசப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

**தமிழாக்கம்: அஷ்கர் தஸ்லீம்**



நவமணி

## வாசகர் உரிமை

நாம் வாசகர்களின் உரிமைகளுக்கு மதிப்பளிப்பதோடு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் பத்திரிகைத்துறையினருக்கான தொழில்சார் ஒழுக்கக்கோவையின்படி கருமமாற்றவும் தம்மை அர்பணித்துள்ளோம். அதனால் எமது பத்திரிகையில் பிரசுரமாகின்ற விடயங்கள் தொடர்பாக ஏதாவது மனக்குறைகள் அல்லது பிரச்சினைகள் இருப்பின் அதுபற்றி எம்மோடு தொடர்புகொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம். உங்கள் மனக்குறைகள் அல்லது அதிருப்திகள் குறித்து நாம் கவனம் செலுத்தி அவற்றை நிறைவு செய்ய முயற்சி செய்வோம்.

அதன்மூலம் உங்களால் திருப்தியடைய முடியாவிட்டால்

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவுக்கு முறைப்பாடு செய்யலாம்.

மேலதிக விபரங்களுக்கு

Press Complaints Commission of Sri Lanka

இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு
இல : 96, கிருல வீதி, கொழும்பு – 05
தொலைபேசி : 011-5353635 பெக்ஸ் - 011-5335500
ஈமெயில் : pccsl@pccsl.lk
இணையத்தளம் : www.pccsl.lk

LANKA SATHOSA லங்கா சதொச

# தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவர்

கைத்தொழில் மற்றும் வர்த்தக துறை அமைச்சு

## தேசத்திற்கு விலையை நிர்ணயிப்பவருடன் தொழில் வாய்ப்புக்கள்

லங்கா சதொச வலையமைப்பானது நாடுமுழுவதும் 300ற்கும் மேற்பட்ட கிளைகளுடன் ரூபா.30 பில்லியன் புரள்வை கொண்ட இலங்கையின் பாரிய சில்லறை விற்பனை நிலைய வலையமைப்பாகும். நாம் எமது கீழ்காணும் குறிக்கோள்களை அடைய எதிர்பார்த்துள்ளோம்.

- வாழ்க்கை செலவை குறைத்தல்
- நாட்டு மக்களை வியாபாரங்களுடன் தொடர்புபடுத்தல்
- சிறு மற்றும் நடுத்தர வியாபாரிகளுக்கான வியாபார கோரலை நாடு முழுவதும் கொண்டு வர வாய்ப்பை ஏற்படுத்தி கொடுத்தல்.

இதன் அடிப்படையில் நம் இலக்குகளை அடைவதுடன் எமது வியாபார நடவடிக்கைகளை மேலும் மேம்படுத்த எமது கிளைகளை 500 ஆக அதிகரித்து புரள்வை ரூபா.50 பில்லியனாக அதிகரிக்கும் நோக்கில் தொழில் சார் வல்லுனர்களை கீழ் காணும் வெற்றிடங்களுக்கு எதிர்பார்க்கின்றோம்.

## வேலைவாய்ப்பு

### பிரதி பொதுமுகாமையாளர் (சந்தைப்படுத்தல்) ஒப்பந்த அடிப்படையில்

**பணி தொடர்பான பொறுப்புகள்**

- லங்கா சதொச தொடர்பில் இடம்பெறும் விற்பனை நிலையங்களை அபிவிருத்தி செய்யும் திட்டத்தின் மூலம் விற்பனை தொடர்பிலான இலக்கை அடைதல் மற்றும் வரவினை உறுதிப்படுத்திக்கொள்ளல்.
- வணிக குழுவின் உள்ளே புதிய உபாயங்களை வெற்றிகரமாக கையாள்வது தொடர்பில் புதிய மற்றும் மீள் அமைப்புத்திட்டங்களை முகாமைத்துவம் செய்தல்.
- சந்தையின் தன்மை மற்றும் பிரதான போட்டியாளர்களின் போக்கை புரிந்துகொண்டு நிறுவனத்திற்காக புதிய வாடிக்கையாளர்களை நெருங்குதல் மற்றும் தெளிவான வியாபார தகவல்களை நிர்மாணித்தல்.
- வருடாந்த விற்பனை தொடர்பிலான வரவு - செலவு மற்றும் வருடாந்த விற்பனை நாளேடுகளை தயாரித்தல்.
- பங்குச் சந்தையில் பங்குகளை அதிகரிப்பது தொடர்பில் முறை சார்ந்த மற்றும் சாரா வியாபாரங்களை நடாத்துதல்.
- அனைத்து சில்லரை விற்பனை நிலைய முகாமையாளர்கள் தொடர்பில் நிரந்தர விமர்சனங்களை நடாத்தி அவர்களது பணிகள் தொடர்பிலான நடவடிக்கைகளை அபிவிருத்தி செய்வது தொடர்பில் அறிவினை பெற்றுக் கொடுத்தல்.
- பணிகள் தொடர்பில் முகாமையிடல் மற்றும் சரியான நேரத்தில் மறுமொழிகள் மற்றும் வணிகம் தொடர்பிலான ஆலோசனைகளை பெற்றுக்கொடுத்தல்
- உறிய காலங்களில் முறையான போட்டித்தன்மையிலான விலைகளைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அதன் மேலதிக அபிவருத்தி தொடர்பில் சந்தைப்படுத்தல் தொடர்பிலான அறிவினைப் பெறல்.
- விநியோகஸ்தர்கள் மற்றும் கணக்கியல் தொடர்பில் கையாளுதல் , வரவு எல்லைகள் என்பன அதிகரிக்க பாடுபடுதல்.
- தேவையான அளவு ஊடகம் / மக்கள் தொடர்பினை அதிகரிக்க நிறுவன உறுப்பினர்களுக்கு பங்களிப்புச் செய்தல்.
- அனைத்து விற்பனை மற்றும் தகவல்கள் பரவுதலை கட்டுப்படுத்தல்.
- உற்பத்தியின் சிறப்புத்தன்மை, தரவு விற்பனை பொருள்களின் தன்மைகளுக்கு ஏற்ப நாடு முழுதும் இருக்கும் கிளைகளுக்கு விற்பனை தொடர்பிலான ஒத்துழைப்பினை பெற்றுக்கொள்ளுதல்.
- அனைத்து நிறுவன கொள்கைகள் , பணிகள் தொடர்பிலான படிமுறைகள் மற்றும் வியாபார சட்டங்களை பின்பற்றல், குழுக்களுக்கிடையிலான செயற்பாடுகளை செயற்படுத்தல்.

**தகைமைகள்**

**புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 02)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதல் நிலை பட்டம்

   அத்துடன்

   வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் பட்டப்பின் படிப்பு பட்ட தகைமை (மாஸ்டர்)

   அல்லது

   வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

   மற்றும்

   நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தது 05 வருடங்கள் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
2. வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தது 15 வருடங்கள் முகாமைத்துவ நிலையில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 02)**

1. சிரேஷ்ட முகாமையாளர் நிலையில் குறைந்தது 05 வருட முன் அனுபவத்துடன் புற விண்ணப்பதாரிகள் கோரப்பட்ட கல்வி மற்றும் தொழில்சார் தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
2. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் சிரேஷ்ட முகாமையாளராக முதல் தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

   மற்றும்

   வயது: 35 வயதிற்கு மேல் இருத்தல் வேண்டும்.

**சிறந்த விண்ணப்பதாரிகள் பின்வருவனவற்றையும் கொண்டிருத்தல் வேண்டும்.**

- தவறுகள் நேரும் போது அதை புரிந்து அதற்கான தீர்வை சுமுகமாக வழங்குவதுடன், ஒழுங்குபடுத்தல் முறை, மதிப்பீடு, விமர்சனங்கள் என்பவற்றை கையாள்வதுடன் சுய ஊக்குவிப்பு உள்ளவராக இருத்தல் வேண்டும்.
- அனைவருடனும் சிறந்த நட்புறவை பேணும் திறமையுடன், சிறந்த தலைமைத்துவ பண்பை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- தகவல் தொழிநுட்பத்தில் சிறந்த திறமை கொண்டவராக இருத்தல் வேண்டும்.
- பல்வேறு போதனைகளைக் கொண்டு குழுக்களுக்கு தலைமைத்தாங்கி வழி நடத்தல் தொடர்பிலான திறன், மானிட மற்றும் ஏனைய வளங்களை கையாளுதல் மற்றும் முகாமைத்துவம் செய்யும் திறன்.

### சிரேஷ்ட முகாமையாளர் (விற்பனை) HM- 1-1

**பணி தொடர்பான பொறுப்புகள்**

- விற்பனை செயற்பாடுகள் கொண்ட விநியோகித்தல் தொடர்பிலான தொடர்பாடல்
- நிறுவன விநியோகம் தொடர்பான வரவு- செலவு ஆய்வுகள்
- வியாபார வகைகளை திட்டமிடல் மற்றும் செயற்படுத்தல்
- சரியான வியாபாரம், சிறந்த பிரதிலாப முகாமைத்துவம் மற்றும் அதன் மேம்படுத்தல்கள்
- விநியோக தொடர்பாடல் பணிகள் தொடர்பிலான ஆய்வுகள் மற்றும் அறிக்கைகள்
- விநியோக குறிக்கோள்கள் தொடர்பில் குறித்த நிறுவனங்களின் பணிகள் தொடர்பில் அறிவை வளர்த்தல் மற்றும் அது தொடர்பில் சிறந்த தொடர்பாடலை முன்னெடுத்தல்.
- எந்தவொரு சந்தைப்படுத்தல், போக்குவரத்து மற்றும் அனுசரனை வியாபாரத்தை மேம்படுத்தல் மற்றும் நிறுவனத்தின் வளர்ச்சி தொடர்பில் சான்று பதித்தல்.

**புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 02)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் முகாமைத்துவம், வியாபார முகாமைத்துவம் தொடர்பான முதல் நிலை பட்டம்

   அத்துடன்

   வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் பட்டப்பின் படிப்பு பட்ட தகைமை (மாஸ்டர்)

   அல்லது

   வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

   மற்றும்

   நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தது 15 வருடமும் சிரேஷ்ட முகாமைத்துவ நிலையில் 05 வருட முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.
2. வெற்றிடத்திற்கு பொருத்தமான வகையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் அங்கத்தவராக இருத்தல் வேண்டும்.

   அத்துடன்

   நிறுவனம், நியதிச் சட்ட சபை / நிறுவனம் அல்லது பிரபல்யமான தனியார் நிறுவனத்தில் நிர்வாக மட்டத்தில் குறைந்தது 15 வருடங்கள் முகாமைத்துவ நிலையில் முன் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

**உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 02 )**

3. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
4. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் சிரேஷ்ட முகாமையாளராக முதல் தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **வயது** | : 45 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது. |
| **ஊதிய குறியீடு** | : HM- 1-1 |
| **சம்பள முறை** | : ரூபா. 38,530 - 15 X 1,100 - 55,030 |

**ஏனைய பிரதிலாபங்கள் :**

(வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு- ரூபா.7,800 + கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவு ரூபா.5,000 + வாகனக் கொடுப்பனவு ரூபா.50,000 + எரிப்பொருள் கொடுப்பனவு ரூபா.15,000 மேலதிக கொடுப்பனவு ரூபா.10,000)

### முகாமையாளர் (விற்பனை ) - HM 1-1

**பொறுப்புகள்**

- வருடாந்த சந்தைப்படுத்தல் வரவு செலவுகளை நிர்வகித்தல்.
- ஒன்றுகூடல்கள், மாநாடுகளில் பங்குபற்றி விலை நிரல் தயாரித்து முகாமைத்துவம் செய்தல்.
- தொடர்பாடல் மற்றும் சந்தைப்படுத்தல் தொடர்பான நிறுவனங்களின் செயற்பாடுகள் தொடர்பில் முகாமைத்துவத்திற்கு அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- சந்தைப்படுத்தல் செயற்பாடுகளில் விற்பனை பொருட்கள் தொடர்பான தகவல்களை வழங்குதல்.
- உற்பத்தியாளர்களுடன் சிறந்த இணக்கத்தை பேணி உற்பத்தியை மேலும் செம்மையாக மேற்கொள்ள வழிநடத்துதல்.
- எந்தவொரு சந்தைப்படுத்தல், வழங்கல் மற்றும் அனுசரனை சார்ந்த வியாபரங்களை முன்னேற்றமடையச் செய்து நிறுவனத்தின் வளர்ச்சி தொடர்பில் சான்றளித்தல்.
- பணிப்பாளர் சபை மற்றும் மக்களுக்கிடையில் ஒரு சிறந்த இணக்கத்தை பேணி அது தொடர்பில் அறிக்கைகளை சமர்ப்பித்தல்.
- நிறுவனத்தின் குறியீட்டு நாமங்கள் , விற்பனை விளம்பரங்கள், புதிய உற்பத்திகளை மேம்படுத்தி தொடர்புபடுத்தல் தொடர்பான செயற்பாடுகள்.
- ஊடங்கள் தொடர்பான திட்டமிடலின் போது சிறந்த ஆலோசனைகளை வழங்குதல்.

**புற விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 2)**

1. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அங்கீகாரத்தின் கீழ் சந்தைப்படுத்தல் அல்லது வணிகம் தொடர்பான பாடங்களில் முதல் நிலை பட்டம்

   அத்துடன்

   முதல் நிலை பட்டமொன்றை பெற்றதன் பின் குறிப்பிட்ட துறையில் முகாமைத்துவ மட்டத்தில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்
2. குறிப்பிட்ட துறையில் அங்கீகாரம் பெற்ற தொழில் முறை பட்டய நிறுவனமொன்றில் இடைநிலை தேர்வில் சித்தி பெற்றிருப்பதுடன் குறிப்பிட்ட துறையில் குறைந்தது ஒரு வருட முன் அனுபவம்

**உள்ளக விண்ணப்பதாரிகள் (குறைந்தது 1 அல்லது 02)**

1. மேலே புற விண்ணப்பதாரிகளுக்கு கோரப்பட்ட தகைமைகளை கொண்டிருத்தல் வேண்டும்.
2. வெற்றிடங்கள் உள்ள இடங்களில் கனிஷ்ட முகாமையாளராக (JM) முதல் தர நிலையில் குறைந்தது 05 வருட திருப்திகரமான சேவையை வழங்கியவராக இருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **வயது** | : 45 வயதிற்கு குறைந்தவராய் இருத்தல் வேண்டும். உள்ளக விண்ணப்பதாரர்களுக்கு வயதெல்லை கிடையாது. |
| **ஊதிய குறியீடு** | : HM- 1-1 |
| **சம்பள முறை** | : HM- 1-1 [ரூபா. 25,640 -3 X 665 -7 X 735 -15 X 925- 46,655] |

**மற்றைய பிரதிலாபங்கள் :**

(வாழ்க்கைச் செலவு கொடுப்பனவு- ரூபா.7,800 + கையடக்கத் தொலைபேசி கொடுப்பனவு ரூபா.5,000 + வாகனக் கொடுப்பனவு ரூபா.12,500 + மேலதிக கொடுப்பனவு ரூபா.10,000)

**நீங்கள் இத்தகைமைகள் மற்றும் முன் அனுபவத்தை கொண்டுள்ளீர்களினின் உங்களுடைய சுயவிபரக்கோவையுடன், உங்கள் சான்றிதழ் பிரதிகளை இந்த விளம்பரம் பிரசுரமாகி 10 நாட்களுக்குள் எமக்கு கிடைக்கப்பெறுமாறு பதிவுத்தபாலில் அனுப்பி வையுங்கள்.**

**(கோரப்படும் வெற்றிடத்தை விண்ணப்பப்படிவ தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் குறிப்பிடவும்.)**

தலைவர்

**லங்கா சதொச லிமிடட்**

**சதொச செயலாளர் காரியாலயம் இல. 27, 05 ஆம் மாடி வோர்க்ஷோல் வீதி, கொழும்பு 02**

# ஸகாத்தும் கால தாமதமும்

உஸ்தாத் ஏ.ஸி.அகார்முஹம்மத்



**கேள்வி:** ஒருவர் தனது கணக்கிடப்பட்ட ஸகாத் பணத்தை கணக்கிடப்பட்டதும் உடனே கொடுத்து முடித்து விட வேண்டுமா? சில காரணங்களுக்காக அதனைக் காலம் தாழ்த்திக் கொடுக்கலாமா? சிறிது காலத்துக்கு அதனைத் தனது முதலுடன் இணைத்துத் தொழிலில் ஈடுபடுத்தலாமா? தெளிவான விளக்கம் தேவை.

**பதில்:** ஒருவர் தனது பொருளில் ஸகாத்தாகக் கொடுக்கப்பட வேண்டிய தொகையை அதனைக் கணக்கிட்டவுடன் தாமதமின்றி விநியோகித்துவிட வேண்டுமா அல்லது தாமதித்துக் கொடுக்கவும் அனுமதியுண்டா என்ற விடயத்தில் கருத்து வேறுபாடு உண்டு.

கடமையான ஸகாத்துக்குரிய தொகையைத் தாமதிக்காது உடன் நிறைவேற்றி விட வேண்டும் என்பதே இமாம்களான ஷாபிஈ, மாலிக், அஹ்மத் ஆகியோர் உட்பட ஹனபி மத்ஹபைச் சேர்ந்த சில உலமாக்களினதும் கருத்தாகும்.

ஒருவருக்கு ஸகாத் கடமையை நிறைவேற்றுவதற்கான எல்லா நிபந்தனைகளும் அமையப் பெற்றிருந்து அதனை உடனே நிறைவேற்றுவதற்கு முடியுமான நிலைமையிலும் அவர் இருந்தால், அதனைப் பிற்படுத்துவது கூடாது.

ஸகாத்தைத் தாமதித்துப் பிற்படுத்தி நிறைவேற்றலாம் என்பது இமாம் அபூ ஹனிபா (றஹ்) அவர்களினதும் பெரும்பாலான ஹனபியாக்களினதும் அபிப்பிராயமாகும்.

ஆயினும், முதல் தரப்பினரின் கருத்தே பலமானதாகக் கொள்ளப்படுகின்றது. அவர்கள் தமது முடிவுக்கு ஆதாரங்களாகப் பின்வருவனவற்றை முன்வைத்துள்ளனர்.

1. ஸகாத்தைக் கொடுங்கள் என்ற அல்லாஹ்வின் கட்டளை உடன் அது நிறைவேற்றப்பட வேண்டும் என்பதையே வேண்டி நிற்கிறது.

2. கடமையான ஒன்றை விடுவது தண்டனைக்குரிய குற்றமாகும். அத்தகைய கடமையொன்றைத் தாமதித்துச் செய்ய முடியும் என்றிருப்பின், அக்கடமையை நிறைவேற்றாத ஒருவரை இறுதிவரை தண்டிப்பது என்பது சாத்தியமற்றதாகிவிடும்.

3. ஏழையின் தேவை உடனடியாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று. எனவே அதற்காக வகுக்கப்பட்டுள்ள ஸகாத்தும் உடன் நிறைவேற்றப்பட வேண்டியதாகும்.

4. செல்வத்தை நேசிப்பது, அதனை இழக்க விரும்பாதிருப்பது மனிதனின் சுபாவமாகும். இந்நிலையில் ஸகாத்தைப் பிற்படுத்தித் தாமதமாகவும் நிறைவேற்றலாம் என்றிருப்பின் ஒருவர் அதனைத் தொடர்ந்தும் பிற்படுத்தி இறுதியில் அவர் மரணித்துவிட இடமுண்டு. அல்லது செல்வமானது அவர் கையிலிருந்து அழிந்து விடவும் சாத்தியமுண்டு.

5. ஸகாத் என்பது தொழுகை, நோன்பு ஆகியன போன்ற மீண்டும் மீண்டும் (உ-ம் வருடாந்தம்) தொடர்ந்து நிறைவேற்ற வேண்டிய ஒரு வணக்கமாகும். எனவே ஒரு முறைக்குரிய ஸகாத்தை அடுத்த முறைவரை பிற்போடுவது கூடாது.

ஒருவர் தன்மீது ஸகாத் வாஜிபான நிலையில் அதனை நிறைவேற்றும் சந்தர்ப்பம் கிடைத்தும் நிறைவேற்றாது மரணித்து விட்டால், அது அவரது வாரிசச் சொத்திலிருந்து நிறைவேற்றப்பட வேண்டும் என்பது இமாம்களான ஷாபிஈ, அஹ்மத் ஆகியோரின் கருத்தாகும்.


'மனிதருக்குரிய கடன்களே நிறைவேற்றப்பட வேண்டும் என்றிருக்கும் போது அல்லாஹ்வுக்குரிய கடன் (அவற்றைவிட) நிறைவேற்றத்தக்கதாகும்' என்ற ஹதீஸ் இக்கருத்துக்கு ஆதாரமாக கொள்ளப்படுகின்றது.

மேலே கண்டவாறு ஸகாத் என்பது தாமதமின்றி அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய ஒன்று என்றிருப்பினும் அதனை உடனடியாக நிறைவேற்றுவதில் தனக்கோ அல்லது தனது பொருளுக்கோ கேடேதும் ஏற்படும் என்று அஞ்சும் போது அதனைப் பிற்படுத்துவதில் தவறில்லை. அவ்வாறே, மிகப் பொருத்தமானவரைக் கண்டறியும் வரை அல்லது இதுபோன்ற பிற நியாயமான நலன்களைக் கருத்திற் கொண்டு ஸகாத் கடமையை உடன் நிறைவேற்றாது பிற்படுத்துவதற்கு அனுமதியுண்டு.

மேலும் ஒருவர் தனது சொந்தத் தேவைக்காகத் தான் ஸகாத்தாகக் கொடுக்க வேண்டிய தொகையைச் செலவு செய்து விட்டு பின்னர் அதனை உரியவர்களுக்கு வழங்கவும் இடமுண்டு. ஆனால், அத்தொகை அவரின் பொறுப்பிலுள்ள மிகப் பெரியதொரு கடனாகும் என்பதனை அவர் உணர வேண்டும். பொதுவாக எந்த அமலையும் தாமதப்படுத்தாது விரைவாக நிறைவேற்றும் படியே இஸ்லாம் வலியுறுத்துகின்றது. இந்த வகையில் ஸகாத் போன்ற ஒரு கடமையை முடியுமானவரை துரிதமாக நிறைவேற்ற முயல்வது ஒரு முஸ்லிமின் கடமையாகும்.



# லைலத்துல்கதர் இரவு




ஆதில் அலி சப்ரி

மகத்துவமிக்க இரவில் இதை நாம் அருளினோம். மகத்துவமிக்க இரவு என்றால் என்னவென உமக்கு எப்படித் தெரியும்? மகத்துவமிக்க இரவு ஆயிரம் மாதங்களை விடச் சிறந்தது. வானவர்களும், ரூஹும் அதில் தமது இறைவனின் கட்டளைப்படி ஒவ்வொரு காரியத்துடனும் இறங்குகின்றனர். ஸலாம்! இது வைகறைவரை இருக்கும்.

(அல்குர்ஆன் 97:1-5)

அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: எவர் நம்பிக்கையுடனும் நன்மையை எதிர்பாத்தவராகவும் லைலத்துல் கத்ரு இரவில் நின்று வணங்குகிறாரோ அவரது முந்திய பாவங்கள் மன்னிக்கப்படும். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலி), நூல்: புகாரி (35)



லைலத்துல் கத்ரு இரவில் இவ்வளவு சிறப்பை இறைவன் வைத்திருந் தாலும் அது எந்த இரவு என்பது நபி (ஸல்) அவர்கள் உட்பட யாருக்கும் தெரியாது. நபி (ஸல்) அவர்களுக்கு எடுத்து சொல்லப்பட்ட அந்த இரவை அல்லாஹ் ஏதோ ஒரு காரணத்திற்காக மறக்கடித்துள்ளான். நபி (ஸல்) அவர்கள் லைலதுல் கத்ரு இரவைப் பற்றி அறிவிப்பதற் காக தமது வீட்டிலிருந்து வெளியே வந்தார்கள். அப்போது முஸ்லிம்க ளில் இருவர் சச்சரவு செய்து கொண்டிருந்தார்கள். லைலதுல் கத்ரு இரவு பற்றி நான் உங்களுக்கு அறிவிப்பதற்காக வந்தேன். அப்போது இன்னின்ன மனிதர்கள் தமக்குள் சண்டை செய்து கொண்டிருந்தார்கள். உடனே அது (என் நினைவிலிருந்து) அகற்றப்பட்டு விட்டது. அதுவும் உங்களுக்கு நன்மையாக இருக்கலாம் ரமலான் மாதத்தின் இருபத்து எழு, இருபத்தி ஒன்பது, இருபத்தி ஐந்து ஆகிய இரவுகளில் அதனைப் பெறமுயற்சி செய்யுங்கள் என்றார்கள்.அறிவிப்பவர்: உபாதா பின் ஸாமித் (ரலி), நூல்கள்: புகாரி (49), முஅத்தா (615)

நபி (ஸல்) அவர்களுக்கே தெரியாது என்று இந்த ஹதீஸ் தெளிவாகக் கூறுவதால் அது குறிப்பிட்ட இந்த இரவுதான் என்று இவ்வுலகத்தில் எந்த மனிதனும் கூற முடியாது. எனினும் லைலதுல் கத்ர் ரமலான் மாதத்தின் கடைசிப் பத்தின் ஒற்றைப் படை இரவான 21, 23, 25, 27, 29 ஆகியவற்றில் ஏதாவது ஒன்றாக இருக்கலாம் என்று நபி (ஸல்) அவர்கள் கூறிய ஆதாரப்பூர்மான செய்திகள் உள்ளன.

ரமலானில் கடைசிப் பத்து நாட்களில் உள்ள ஒற்றைப்படை இரவுகளில் லைலதுல் கத்ரைத் தேடுங்கள் என்று அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: ஆயிஷா (ரலி)

நூல்கள்: புகாரி 2017இ முஸ்லிம் 1997

நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களுக்கு லைலதுல் கத்ரு இரவைப் பற்றிச் சொல்லும் போது, அது ரமலான் மாதத்தில் தான் இருக்கிறது. எனவே, அதை ரமலானில் கடைசிப் பத்தில் தேடுங்கள். அது ஒற்றைப்படை இரவான இருபத்தி ஒன்று அல்லது இருபத்தி மூன்று அல்லது இருபத்தி ஐந்து அல்லது இருபத்தி எழு அல்லது ரமழானின் கடைசி இரவில் (29) இருக்கும் என்று சொல்லி விட்டு, யார் அதில் ஈமானோடும் நன்மையை எதிர்பார்த்த வராகவும் நின்று வணங்குகிறாரோ அவருடைய முந்திய பாவங்கள் மன்னிக்கப்படும் என்று கூறினார்கள். அறிவிப்பவர்: உபாதா பின் ஸாமித் (ரலி), நூல்:அஹ்மத்

மேற்கூறிய ஹதீஸ்கள் ஐயத்திற்கு இடமின்றி லைலதுல் கத்ர், ரமலான் மாதத்தில் கடைசிப் பத்து இரவுகளில் 21, 23, 25, 27, 29 ஆகியவற்றில் ஏதாவது ஒன்றில் தான் இருக்கும் என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது.

# இறுதிப்பத்தும் வியாபாரிகளும்

ரமழானில் கடைசிப் பத்தில் முஸ்லிம் வியாபாரிகள் இரவு பகலாக கடைகளைத் திறந்து வைத்திருக்கின்றனர். இது அண்மைக் காலங்களில் ஏற்பட்ட ஒரு புதிய மாற்றம். ஆரம்ப காலங்களில் இவ்வாறானதொரு நிலை இருக்கவில்லை. ஆடம்பர மோகம், எளிமையான வாழ்வு எம்மை விட்டும் விடை பெற்றுச் சென்றமை, இக்காலப் பகுதியில் அதிகப்படியான இலாபம் கிடைப்பது போன்ற காரணத்தினாலும் இன்று ரமழானுடைய பிற்பகுதி முழுக்க முழுக்க கடைத் தெருக்களிலும் நடைபாதைகளிலும் கழிகின்றன.



ரமழானின் கடைசிப்பகுதி வந்துவிட்டால் நபி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் லுங்கியை இறுக வரிந்து கட்டிக் கொண்டு வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவார்கள். குடும்பத்தாரையும் விழிப்படையச் செய்து அவர்களும் இரவெல்லாம் வணங்குவதற்கு உற்சாகமளிப்பார்கள்.

எனவே, வியாபாரிகள் தமது வருமானத்தைப் பெருக்கிக் கொள்ளும் ஒரு பருவ காலமாக ரமழானைப் பயன்படுத்தாமல் அதனை ஆன்மிக வாழ்வுக்கான பருவ காலமாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அவர்கள் வேறு பண்டிகைகள், விழாக்களை இலாபமீட்டிக் கொள்வதற்கான பருவ காலமாக மாற்றிக் கொள்ளட்டும்.

தற்போது சில வானொலி அலைவரிசைகளைக் கூட சிலர் வியாபார நோக்கத்துக்காக ஆரம்பித்துள்ளார்கள். அதில் கவர்ச்சிகரமான விளம்பரங்களை ஒலிபரப்பி மக்களை ஈர்த்துவிடுகின்றார்கள்.

வியாபாரிகள் இதற்கு மாற்று வழிகளைக் காண வேண்டும். குறிப்பாக இரவு காலங்களில் கடைகளைத் திறந்து வைத்து இரவு முழுக்க அல்லது நடுநிசி வரை வியாபாரம் செய்கின்ற சம்பிரதாயம் மிகவும் ஆபத்தானது. அதன் மூலம் ரமழானின் சிறப்புகளுக்கும் அதன் எதிர்பார்ப்புகளுக்கும் நாம் துரோகமிழைக்கின்றோம்.

வெறும் அற்ப லௌகிக இலாபத்துக்காக வாழ்க்கையில் மிக அருமையாகக் கிடைக்கும் ரமழானுடைய காலத்தை நாம் வீணடித்து நஷ்டவாளிகளாக ஆகிவிடக் கூடாது. ஒரு ரமாழானை அடைந்தவர் அடுத்த ரமழானை அடைவார் என்பதற்கு எவ்வித உத்தரவாதமுமில்லை.

எனவே ஒவ்வொரு ரமழானையும் கடைசி ரமாழான் என்ற உணர்வோடு நோக்குவோம். எதிர்வரும் ரமழானில் முழுமையான பயனடைந்து முத்தகீன்களாக மாறுவதற்கு முயற்சிப்போம்!

16

2017 ஜுன் 19

ஹிஜ்ரி 1438 ரமழான் 24

**நவமணி மற்றும் ஜம்மியத்துஷ் ஷபாப் நிறுவனம் ஐந்தாவது தடவையாக இணைந்து நடாத்தும் மாபெரும் பரிசுப்போட்டி**




## போட்டி - 01

(திங்கள் – வெள்ளி)

1ஆம் பரிசு : உம்ரா பொதி
2ஆம் பரிசு : மடிக் கணனி
3ஆம் பரிசு : கணனி
22 ஆறுதல் பரிசுகள்

## போட்டி - 02

(வெள்ளிக்கிழமை)

கட்டுரைப் போட்டியில் முதல் 3 இடங்களுக்கு பெறுமதியான பரிசில், நினைவுச் சின்னம், சான்றிதழ் வழங்கப்படும்

## போட்டி நிபந்தனைகள்

- தினமும் 5 கேள்விகள்
- 30 நாள் கேள்விகளில் 25 நாட்களுக்கு மாத்திரம் விடையளித்தல் போதுமானது. (5 நாட்களுக்கு விடையளிக்காது விடலாம்)
- வெள்ளிக்கிழமைகளில் வழங்கப்படும் தலைப்புக்கு (போட்டி 02) 200 சொற்களில் கட்டுரை எழுதி அனுப்பவேண்டும்.
- போட்டி 02 இல் பங்குபற்றுவது விருப்பத்துக்குரியது
- போட்டி 01 மற்றும் 02 இற்கான விடைகளை ஒட்டுமொத்தமாக ஜூலை 15ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவையுங்கள். தனியாக அனுப்பப்படுபவை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
- போட்டிகளின் முடிவுத்திகதி - ஜூலை 15, 2017

1. இறுதியாக முழுமையாக இறங்கிய சூறா எது?
2. நபி(ஸல்) எந்த வருடத்தில் 'ஹஜ்ஜதுல் விதா'வை நிறைவேற்றினார்கள்?
3. 'மஸ்ஜிதுல் அக்ஸா' அமைந்திருக்கும் மலையின் பெயர் என்ன?
4. அரபுமொழியை தாய் மொழியாகக் கொண்ட 5 நாடுகளைத் தருக?
5. அல்லாஹ் வானம், பூமியை குறிப்பிட்ட நாட்களில் படைத்ததாகக் கூறப்படும் ஆயத்தைத் தருக?

நவமணி போட்டி - 16 நவமணி
19.06.2017 - திங்கட்கிழமை

பெயர் :..............................................
முகவரி :..............................................
தொலைபேசி :..............................................
தே.அ.அ. இல.:..............................................
கையொப்பம் :..............................................

Freelanka Media Ltd, 156, Hospital Road, Kalubowila, Dehiwala

மேலதிக விபரங்களுக்கு
எம்.எஸ்.எம். சாஜஹான் - 0778751032,
வாரித் - 0772604964, அஷ்ஷெய்க் ரிஷாத் 077 2415415

# பௌத்த மதத்துக்கு எதிரான நடவடிக்கைகளில் நல்லாட்சி

## மஹிந்த குற்றச்சாட்டு

■ பீ.எப்.எம் றிஷாட்



தனது மதத்துக்காகவும், இனத்துக்காகவும் குரல் கொடுப்பவர்களுக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கு, இந்த அரசாங்கத்தால் சட்டம் கொண்டுவர நடவடிக்கைகள் எடுக் கப்படுகின்றன என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ குற்றஞ்சாட்டியுள்ளார்.

மாத்தறை பிரதேசத்திலுள்ள விஹாரையொன்றின் கட்டடத்தை நேற்று முன்தினம் (சனிக்கிழமை) திறந்து வைத்து உரை யாற்றிய போதே இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், பௌத்த மதத்திற்கு ஆதரவாக குரல் கொடுப்பவர்களுக்கு எதிரான நடவடிக்கைகளை அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

புதிய சட்டங்களைக் கொண்டு வந்து மதம், இனம் என்பவற்றிலிருந்து மக்களைத் தூரப்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படும் போது, சமயத்தின் மீதுள்ள பற்று அதிகரிக்குமே தவிர அவை குறைவடையாது.

இந்த அரசாங்கத்தில் பௌத்த பிக்குகளும், நாட்டுக்காக தமது உயிரையும் பொருட்படுத்தாது பணியாற்றியவர்களுமே அதிகம் துன்புறுத்தப்படுகிறார்கள் என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மேலும் குறிப்பிட்டுள்ளார்.

# கொழும்பு நகர குப்பைகளை விரைவில் அகற்றுமாறு பிரதமர் ஆலோசனை



கொழும்பு நகரில் கொட்டப்படும் குப் பைகளை குறித்த இடங்களில் இருந்து விரைவாக அகற்று வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, கொழும்பு மாநகர ஆணையாளருக்கு ஆலோசனை வழங் கியுள்ளார்.அத்துடன், நாட்டில் பல்வேறு பகுதிகளில் தேங்கிக்கிடக்கின்ற குப் பைகளையும் விரைவில் அகற்றுவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமாறு உரிய அமைச்சுக்களுக்கும் பிரதமர் இதன்போது உத்தரவிட்டார்.எனவே 24 மணித்தியாலங்களுக்குள் குறித்த குப்பைகளை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் இதன்போது உத்தரவிட்டார்.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க நேற்று காலை கொழும்பு நகரில் குப்பைகள் கொட்டப்பட்டுள்ள இடங்கள் பலவற்றை கண்காணித்துள்ளார்.இதன்போதே அவர் இந்த ஆலோசனையை வழங்கியுள்ளார்.












அசாத் சாலி பவுண்டேசன் நிறுவனத்தின் ஏற்பாட்டில் 14 வருடமாக வழங்கி வரும் நோன்பு கால உலருணவு வழங்கி வைக்கும் நிகழ்வு கண்டி மாவட்டம் மற்றும் குருநாகல உள்ளிட்ட பகுதிகளில் (15) இடம்பெற்றது.

இந்த கண்டி மாவட்ட தேசிய ஐக்கிய முன்னணியின் அமைப்பாளர் ஏ. ஹுஸைன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் அசாத் சாலியின் பிரதிநிதிகளான பஸ்லி, சக்கி, மிலான், பசால் உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர். கண்டி மாவட்டத்தில் தெல்தோட்டை, தெல்தோட்டை, கும்புக்கந்துர, மடவளை, மடவளை உள்ளிட்ட பகுதியிலும் மற்றும் குருநாகல் மாவட்டத்தில் பறகஹதெனிய, நிகவெரட்டிய உள்ளிட்ட பகுதிகளிலும் மிகவும் பின்தங்கிய வறிய குடும்பங்களைச் சேர்ந்தவர்களுக்கு இந்த உலருணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன. கண்டி மற்றும் குருநாகல் உள்ளிட்ட பகுதிகளிலுள்ள வறிய குடும்பங்களைச் சேர்ந்த 1600 பேருக்கு வழங்கி வைக்கப்பட்டன.

(இக்பால் அலி)

## செங்கோல்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பாராளுமன்றின் நிலையியற்கட்டளையானது தற்போதைய யுகத்துக்கு ஏற்றவகையில் முழுமையாக மாற்றியமைக்கப்படவுள்ளது.

அந்தவகையில், பாராளுமன்ற அமர்வின்போது ஒழுக்க விழுமியங்களை மீறி, சபை நடவடிக்கைகளை குழப்பினாலோ அல்லது செங்கோல் மீது கை வைத்தல் மற்றும் அதனை தூக்கிச் சென்றாலோ குறித்த உறுப்பினர் இரண்டு வாரங்கள் முதல் எட்டு வாரங்கள்வரை அவை நடவடிக்கைகளில் பங்குபற்ற முடியாதவகையில் பிரதான ஏற்பாடுகள் இடம்பெற்றுள்ளன என்று அறியக்கிடைத்துள்ளது.

சபை அமர்வுகளின்போது ஒழுக்கவிழுமியங்களை பின்பற்றாது, குழப்பங்களை ஏற்படுத்தும் எம்.பி.க்களுக்கு எதிராக சபாநாயகரால் ஒருவாரம் பாராளுமன்ற அமர்வுகளில் பங்கேற்க தடைவிதிக்க முடியும். எனினும், இத்தண்டனை குறைவாக இருக்கின்றமையாலேயே மேற்கண்ட ஏற்பாடுகள் தற்போது புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, வாய்மூல விளாக்கான பதில் நேரத்தின்போது பாராளுமன்ற உறுப்பினர்களால் அவையில் எழுப்பப்படும் கேள்விகளுக்கு பதிலளிக்க விடயதானத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சபையில் கட்டயமாக பிரசன்னமாகியிருக்க வேண்டும் என்றும் புதிய நிலையியற் கட்டளையில் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன என்று தெரியவந்துள்ளது.

இலங்கை பாராளுமன்ற நிலையியற் கட்டளைகள் 3 தசாப்தங்களுக்கு பின்னர் முழுமையாக மாற்றியமைக்கப்படவுள்ளமையும் இதுவே முதன்முறையாகும். மேலும், இதுதொடர்பிலான வரைபுநகலானது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டு விட்டது என்பதும் இதற்கு திருத்தங்களை முன்வைக்க எதிர்வரும் 22 ஆம் திகதிவரை உறுப்பினர்களுக்கு கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஜூலை 01...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

01 ஆம் திகதி முதல் முன்னெடுக்கவுள்ளதாக போக்குவரத்து அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் தேசிய போக்குவரத்து ஆணைக்குழுவுக்கும் ஆலோசனை வழங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## கிறிஸ்தவ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நடைபெறவில்லை என்றும் அவர் தெரிவித்ததாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

இதேநேரம் லக்ஷான் டயஸ், 166 கிறிஸ்தவ ஆலயங்கள் தாக்கப்பட்டதற்கான முறைப்பாடுகள் செய்யப்பட்ட விபரங்கள் தம்மிடம் இருப்பதாகத் தெரிவித்துள்ளார். பல தாக்குதல்கள் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சு.க..

(முன்பக்கத் தொடர்ச்சி...)

இன்று நடைபெறவிருந்த இக் கூட்டம் அடுத்த வாரத்திற்கு ஒத்திப்போடப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா சு. கட்சி - ஐ.தே.க. கூட்டு கவுன்ஸில் அடுத்த வாரம் கூடி இது பற்றி ஆராயவுள்ளது.

கூட்டுக் கவுன்ஸில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் அமைச்சர்களான மஹிந்த அமரவீர, துமிந்த திசாநாயக்க, சுசில் பிரேம்ஜயந்த, எஸ்.பி. திசாநாயக்க, பிரதியமைச்சர் லசந்த அழகியவன்ன ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

இந்தப் பேரவையில் ஐ.தே.க. சார்பில் அமைச்சர்களான கபீர் ஹாசிம், மலிக் சமரவிக்கிரம, மங்கள சமரவீர, ரவி கருணாநாயக்க, ஹரின் பெர்னாண்டோ, ரஞ்சித் மத்தும பண்டார, தலதா அத்துக்கோரள மற்றும் பிரதியமைச்சர் ரஞ்சித் சமரவீர ஆகியோர் இடம் பெறுகின்றனர்.

2015 ஆகஸ்ட் 21ஆம் திகதி ஸ்ரீலங்கா சு. கட்சி பொதுச் செயலாளர் துமிந்த திசாநாயக்க மற்றும் ஐ. தே.க. பொதுச் செயலாளர் கபீர் ஹாசிமுக்குமிடையே அரசுக்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

இரு வருடங்களுக்காகச் செய்யப்பட்ட இந்த புரிந்துணர்வு ஒப்பந்தத்தை இரு வருடங்களின் பின் மீளாய்வு செய்வதற்கு இணக்கம் காணப்பட்ட நிலையிலேயே கூட்டுப் பேரவை இது பற்றி ஆராயவுள்ளது.

## வன்முறைகளின்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

காணப்படுகின்றனர் என்று பொலிஸ் பேச்சாளரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் பிரியந்த ஜயக்கொடி தெரிவித்தார்.

அத்தோடு, இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய 14 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று ஞாயிறு இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டிருந்தபோதே அவர் மேற்கண்ட தகவலை வெளியிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

நாட்டில் கடந்த காலங்களில் இடம்பெற்ற இனவாத செயற்பாடுகள் தொடர்பிலான விசாரணைகள் சாதகமான முறையில் பொலிஸாரினால் இடம்பெற்று வருகின்றன.

பொலிஸினால் தனித்தனிக் குழுக்கள் அமைக்கப்பட்டு மேற்கொள்ளப்படும் இந்த விசாரணைகளில் இதுவரை தமிழர் ஒருவர், முஸ்லிம்கள் இருவர், சிங்களவர்கள் 11 பேர் என மொத்தமாக 14 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

பாணந்துறையில் இடம்பெற்ற இரண்டு பள்ளிவாசல்கள் மற்றும் அப்பிரதேசத்தில் இயங்கிவந்த இரண்டு வர்த்தகநிலையங்கள் மீது தாக்குதல் மேற்கொண்ட தேரர் மற்றும் கொழும்பு, வாழைத்தோட்ட பொலிஸ் நிலைய கான்ஸ்டபள் உள்ளிட்ட நால்வரை நாம் தற்போது கைது செய்துள்ளோம்.

அதேநேரம், குருநாகல் மல்லேபிடிய பகுதியிலும் இவ்வாறான சம்பவங்களுடன் தொடர்புடைய பிரதான சந்தேக நபர் ஒருவரை கைது செய்துள்ளோம். இவரது வீட்டில் பொது பலசேனா அமைப்பின் கலரொட்டிகள், ஸ்டிக்கர்கள் உள்ளிட்டவை கண்டெடுக்கப்பட்டதுடன், பாணந்துறையில் கைது செய்யப்பட்டவர்களும் அவ்வமைப்புடன் தொடர்புடையவர்களாகவே இருக்கிறார்கள். இவர்களிடம் மேற்கொண்ட விசாரணைகளைத் தொடர்ந்து இன்னும் இரண்டு சந்தேகநபர்களும் வெகுவிரைவிலேயே கொழும்பு, குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்படுவார்கள்.

அத்தோடு, இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் பெரும்பான்மையானோர் பொது பல சேனா அமைப்புடன் தொடர்புடையவர்களாகவே இருக்கின்றனர். ஏற்கனவே, நுகேகொடை பகுதியில் வைத்து கைது செய்யப்பட்ட சந்தேகநபர் பொதுபலசேனா உறுப்பினர் என கூறிய போது, அவ்வமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளரான டிலாந்த வித்தானகே அதற்கு மறுப்பினை தெரிவித்து, கைது செய்யப்படுபவர்கள் தமது உறுப்பினர்கள் என்பதை நிரூபிக்குமாறு எமக்கு சவாலும் விடுத்தார்.

எனினும், நாம் அதற்கு ஊடக சந்திப்பில் பதில் கூறாது எமது செயற்பாடுகள் மூலம் தற்போது தக்க பதிலை அவருக்கு வழங்கியுள்ளோம். இதற்கு அவரும் இதுவரை மறுப்பேதும் கூறாமல் அமைதியாகவே இருக்கிறார். எம்மைப் பொறுத்தவரை இவ்வாறான செயற்பாடுகளில் ஈடுபடுகின்றவர் எவராக இருந்தாலும் பாரபட்சம் பாராது உடனடியாக தகுந்த நடவடிக்கையை மேற்கொள்வோம் என்பதையும் அறிவித்துக் கொள்கிறோம்.

மேலும், பொது பல சேனா அமைப்பின் பொதுச் செயலாளரான கலகொட அத்தே ஞானசார தேரரைக் கைது செய்யும் செயற்பாடும் தற்போது துரிதகதியில் இடம்பெற்று வருகின்றது என்றும் நீதிமன்றினால் நபரொருவருக்கு எதிராக பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளபோது, குறித்த நபரை பாதுகாப்பது சட்டவிரோதமான செயற்பாடு என்றும் பொலிஸ் பேச்சாளர் கூறினார்.

## மொறட்டுவ...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

தீர்மானித்துள்ளது.

முதற்கட்டமாக இப்பீடத்துக்கு நூறு மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் மொஹான் டி. சில்வா தெரிவித்தார்.

இப்பீடத்திற்கு போதனா வைத்தியசாலைகளாக பாணந்துறை மற்றும் களுத்துறை வைத்தியசாலைகள் பயன்படுத்தப்படும். விசேட பயிற்சிக்காக களுபோவில வைத்தியசாலை பயன்படுத்தப்படும் என பேராசிரியர் மொஹான் டி சில்வா தெரிவித்தார்.

## நான்கு மணிநேர...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

விசேட திடீர் சோதனை நடவடிக்கைகளின் போது பல்வேறு குற்றச் செயல்களுடன் தொடர்புடைய 3214 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.இதில் இரவு நேரங்களில் சுற்றித்திரிந்த 934 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்ட 595 பேரும், பல்வேறு குற்றச்செயல்களுக்கு காரணமாக இருந்த 70 பேரும், ஹெரோயின் போதைப் பொருள் வைத்திருந்த 94 பேரும், கஞ்சா வைத்திருந்த 372 பேரும், சட்டவிரோத மதுபானங்களை வைத்திருந்த 176 பேரும் உள்ளடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இதேவேளை, போக்குவரத்துச் சட்டங்களை மீறிய 3647 பேருக்கு எதிராக வழக்குத் தொடர்வதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இந்த விசேட நடவடிக்கைக்கு நாடு முழுவதிலும் 11558 பொலிஸார் ஈடுபடுத்தப்பட்டதாகவும் பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

## சிங்கள - முஸ்லிம்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முன்தினம் (17) முஸ்லிம் பிரதிநிதிகளைச் சந்தித்து, இலங்கை முஸ்லிம்கள் எதிர்கொள்கின்ற பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடிய போதே, ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்களான ஏ.எச்.எம். பௌஸி, கபீர் ஹசீம், ரவூப் ஹகீம், பைசர் முஸ்தபா, பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர்ரஹ்மான் மற்றும் அசாத் சாலி ஆகியோர் கலந்துகொண்டுள்ளனர்.

இவ்வாறான ஒரு மோதல் ஏற்படுத்துவதை தடுப்பதற்காக, அனைத்து மதத் தலைவர்களையும் உள்ளடக்கிய வகையில் மாநாடுகளை நடத்தி, உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும் என இங்கு அமைச்சர் ரவூப் ஹகீம் வலியுறுத்தியுள்ளார்.

பேஸ்புக் போன்ற சமூக ஊடகங்களில் இனவாத, மதவாத கருத்து தெரிவிப்போருக்கு எதிராக சிங்கப்பூர் அரசாங்கம் மேற்கொள்ளும் கடுமையான நடவடிக்கைகள் போன்று இலங்கையிலும் மேற்கொள்ள வேண்டும் என்று இதன்போது அசாத் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதியுடனான இந்தக் கலந்துரையாடலின் போது, இலங்கை முஸ்லிம்கள் அண்மைக் காலமாக பொது பல சேனா போன்ற இனவாத அமைப்புக்களால் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து முஸ்லிம் பிரதிநிதிகள் ஜனாதிபதிக்கு விளக்கமளித்துள்ளனர்.

## பாகிஸ்தான்...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

பல்கலைக்கழகத்தில் நாளை முற்பகல் 11.30 மணி முதல் 2 மணி வரை உரையாற்றுவார்.

முன்னாள் ஜனாதிபதியுடன் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் மற்றும் தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச ஆகியோரும் பயணமாகின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி இந்த மாநாட்டில் பயங்கரவாதத்தைக் கட்டுப்படுத்துவது தொடர்பாக முக்கிய உரையாற்றவுள்ளார். அவர் அங்கு ஏழு நாட்கள் தங்கியிருப்பார்.

## அரசுக்கு...

(முன்பக்கத் தொடர்ச்சி...)

எதிர்வரும் 3 ஆம் திகதி நடைபெறவுள்ள இதில் பாராளுமன்ற உறுப்பினர்களான மஹிந்த ராஜபக்ஷ, தினேஸ் குணவர்த்தன, பந்துல குணவர்த்தன, கெஹலிய ரம்புக்வெல்ல, வாசுதேவ நாணயக்கார, விமல் வீரவன்ஸ, உதய கம்மன்பில மற்றும் பொதுஜன பெரமுனக் கட்சியின் தலைவரான முன்னாள் வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொள்வார்கள் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்போது, அரசு இன்னும் உள்ளூராட்சி மன்றங்களுக்கானத் தேர்தலை நடத்தாமல் இருப்பது, தமது ஆதரவாளர்களை கைது செய்வது உள்ளிட்ட செயற்பாடுகளுக்கு எதிர்ப்புத் தெரிவிக்கப்படும் என்றும் இதற்கும் கடந்த கூட்டங்களைப் போல பல்லாயிரக் கணக்கானோர் கலந்து கொண்டு அரசுக்கான எதிர்ப்பினை வெளியிடுவார்கள் என்றும் கூட்டு எதிரணியால் தற்போது தெரிவிக்கப்பட்டுள்ளது.

# Sports
விளையாட்டுச் செய்திகள்

# இலங்கை கிரிக்கெட் வீரர்களை இராணுவ முகாமிற்கு அனுப்ப வேண்டும்

## விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி



எம்.றிஷான்

ஐ.சி.சி சம்பியன் கிண்ண தொடரில் பிடிவெடுப்புகளை தவறவிட்டதால் தோல்வியை தழுவி தொடரை விட்டு வெளியேறிய இலங்கை கிரிக்கெட் அணி வீரர்களை இராணுவ முகாமிற்கு அனுப்பி 6 மாதகால கட்டாய பயிற்சியளிக்க வேண்டும் என விளையாட்டுத்துறை அமைச்சர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார்.

கொழும்பின் கடந்த வெள்ளிக்கிழமை தேசிய விளையாட்டுத்துறை விஞ்ஞானப் பீடத்தில் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்துக்கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில், இக்கனை காலமும் கிரிக்கட் போட்டியொன்றில் வீரர் ஒருவர் துடுப்பெடுத்தாடும் போது கால் உபாதைக்கு உள்ளாகினால் அவருக்கு பதிலாக இன்னுமொரு வீரர் ஓடுவதற்கு ஆடுகளத்துக்கு அழைக்கப்படுவார். ஆனால் தற்போது அவ்வாறு பிறிதொரு வீரருக்கு ஓடமுடியாது. ஒருவகையில் அதுவும் நல்லது தான், அவர்களுக்கு ஓட முடியாது என்றால் (50 ஓவர்கள் விளையாட முடியாது என்றால்) வீட்டுக்குத்தான் செல்ல வேண்டும்.

இலங்கை அணியை நன்கு அவதானித்தால் எங்களது வீரர்களின் வயிறு ஆடைகளுக்கு மேல் வந்து நன்றாகத் தெரிகிறது. இலங்கை அணியில் மிகச்சிலரே பெரிய வயிறு இல்லாமல் கை, கால்கள் வலுவாக அமைந்து, கட்டுடல் கொண்டவர்களாக இருக்கின்றார்கள். பிடிவெடுப்புகளை கைவிடுவதன் மூலம் போட்டிகளை தோல்வியடைய முடியாது என்று சிலர் கூறுகின்றனர்.

பிடிவெடுப்புகளை தவறவிட்டுத் தான் போட்டிகளில் தோல்வியடைந்து உள்ளனர். பிடிவெடுப்புக்களை பிடிக்க வரும் போது வயிறு பெரிதாக காணப்பட்டால் கை கீழே செல்லாது அதனால் பிடிவெடுப்புகளை எடுக்க முடியாது. பின்பு தலையில் கையை வைத்து கொண்டு இருப்பார்கள். இலங்கையைப் போன்று மோசமான வீரர்களை நான் கண்டதில்லை. பாருங்கள் பங்களாதேஷ் வீரர்களை அவர்கள் சிறப்பாக பயிற்சிகளில் ஈடுபட்டு தமது உடலமைப்பை பேணியுள்ளனர். எமது அணி வீரர்களை குழந்தைகளை போன்று பயிற்றுவிக்கப்படுகின்றார்கள். இதற்கு சிறந்த பதில் நமது வீரர்களை இராணுவ முகாம் ஒன்றிற்கு அனுப்பி 6 மாதங்கள் சிறப்பாக பயிற்சி அளிக்க வேண்டும். இல்லாவிட்டால் இது சரி வராத விடயமாகும் என கூறினார்.

பாகிஸ்தான் அணிக்கெதிரான போட்டியில், இலங்கை அணி வீரர்கள் மோசமான களத்தடுப்பை வெளிப்படுத்தியதன் காரணமாக அரையிறுதி சுற்றுக்கு தகுதிபெற முடியாமல் போனமை குறிப்பிடத்தக்கது.

கிர்கிஸ்தான் திறந்த மெய்வல்லுனர் போட்டி:

# 100 மீற்றரில் தங்கம் வென்றார் அஷ்ரப்; இலங்கைக்கு மேலும் இரு தங்கங்கள்



பீ.எப்.எம் றிஷாட் / சம்கல் ஹூதா

கிர்கிஸ்தானின் பிஷ்கெக் நகரில் கடந்த இரு தினங்களாக இடம்பெற்ற கிர்கிஸ்தான் திறந்த மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற போட்டிகளில் இலங்கை 2 தங்கப் பதக்கங்களையும், ஒரு வெள்ளிப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டன.

குறித்த போட்டிகளில் பங்குகொள்வதற்காக இலங்கையில் இருந்து 8 வீர, வீராங்கனைகள் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில், இரண்டு நாட்களைக் கொண்ட இந்த திறந்த மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளின் முதல் நாளான நேற்றுமுன்தினம் இடம்பெற்ற ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப் பந்தயத்தில் பொத்துவிலைச் சேர்ந்த மொஹமட் அஷ்ரப் தங்கப் பதக்கம் வென்று இவ்வருடத்துக்கான சிறந்த காலத்தைப் பதிவு செய்தார். அஷ்ரப் இந்தப் போட்டித் தூரத்தை 10.51 செக்கன்களில் ஓடி முடித்திருந்தார்.

முன்னதாக இம்மாத முற்பகுதியில் தியகம மஹிந்த ராஜபக்ஷ விளையாட்டரங்கில் நடைபெற்ற ஆசிய மெய்வல்லுநர் போட்டிக்கான இரண்டாவது தகுதிகாண் போட்டியில் ஆண்களுக்கான 100 மீற்றர் ஓட்டப்போட்டியில் கலந்துகொண்ட மொஹமட் அஷ்ரப் குறித்த போட்டித்தூரத்தை 10.58 செக்கன்களில் ஓடிமுடித்து 2ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்டார். எனினும், கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற தேசிய மெய்வல்லுனர் குழாமிற்கான தகுதிகாண் போட்டிகளில் 100 மீற்றர் ஓட்டப்பந்தயத்தை அவர் 10.68 செக்கன்களில் ஓடிமுடித்து முதலாவது இடத்தைப் பெற்றுக்கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இந்த வெற்றியின் பின்னர் கிரிகிஸ்தானில் இருந்து கருத்து தெரிவித்த அஷ்ரப், இந்தப் பருவகாலத்தில் நான் பதிவு செய்த சிறந்த போட்டி நேரமாக இது உள்ளது. அதனை நினைத்து மிகவும் மகிழ்ச்சியடைகின்றேன். இந்த வெற்றியின் மூலம் நான் சிறந்த நிலையில் உள்ளேன் என்பதை உணர முடிகின்றது. எனதும் எமது அணியினதும் அடுத்த இலக்கு இந்தியாவில் இடம்பெறவுள்ள ஆசிய சம்பியன்ஷிப் போட்டிகளில் 100 மீற்றர் அஞ்சலோட்டப் போட்டியில் சிறந்த நேரப் பதிவுடன் வெற்றி பெற்று உலக மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகளில் பங்கு கொள்வதாகும். அதற்காக முழுமையாக முயற்சிப்போம் என்றார். இந்நிலையில், போட்டிகளின் இறுதி நாளான நேற்று இலங்கை அணி மேலும் இரு தங்கப்பதக்கங்களை வென்றது. இதில் ஆண்களுக்கான 400 மீற்றர் தடைதாண்டலில் அரவிந்த சமரநாயக்க போட்டித் தூரத்தை 52.52 செக்கன்களில் கடந்து தங்கம் வென்றதுடன், ஆண்களுக்கான நீளம் பாய்தலில் 7.43 மீற்றர் தூரத்தைக் கடந்த க்ரேஷன் தனஞ்சய தங்கம் வென்றார்.

இதேவேளை, முப்பாய்ச்சலில் இலங்கையின் தேசிய சாதனையை நிலைநாட்டியுள்ள ஹசினி பிரபோதா பாலசூரிய பெண்கள் பிரிவில் முதலிடத்தைப் பெற்றுக்கொடுத்தார். அவர் 12.93 மீற்றர் தூரம் பாய்ந்ததன் மூலமே முதல் இடத்தை தக்கவைத்துக்கொண்டார். அத்துடன், இலங்கை அணியில் அங்கம் வகித்த முப்பாய்ச்சல் வீரரான அதீத கருணாசிங்க 15.74 மீற்றர் தூரம் பாய்ந்து இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப் பதக்கத்தை வென்றார்.



# ரியல் மெட்ரிட்டிலிருந்து விலகுகிறார் ரொனால்டோ?



போர்த்துக்கலைச் சேர்ந்த நட்சத்திர கால்பந்து வீரர் கிறிஸ்டியானோ ரொனால்டோ, ரியல் மெட்ரிட் கழகத்திலிருந்து வெளியேற முடிவுசெய்துள்ளார். ரொனால்டோ 2009ஆம் ஆண்டிலிருந்து ஸ்பெய்னின் ரியல் மெட்ரிட் கழகத்தில் விளையாடிவருகிறார். கடந்த சில ஆண்டுகளாகப் புகைப்பட உரிமம் மூலம் சம்பாதித்த பணத்தை, அவர் வெளிநாடுகளில் முதலீடு செய்து, ஸ்பெய்னில் வரி ஏய்ப்பு செய்ததாகக் குற்றச்சாட்டு எழுந்தது. கிட்டத்தட்ட 14.7 மில்லியன் யூரோ (106 கோடி ரூபாய்) வரை வரி ஏய்ப்பு செய்ததாக, ஸ்பெய்ன் அரசு சார்பில் நீதிமன்றத்தில் அவருக்கு எதிராக வழக்குத் தொடுக்கப்பட்டது. இந்த வழக்கு, விசாரணையில் உள்ளது.

இந்தத் தகவல் வெளியானதை அடுத்து, ரொனால்டோ எங்கு சென்றாலும் பத்திரிகைகள் இதுகுறித்து அவரிடம் கேள்வி எழுப்பி வருகின்றன. என் மனசாட்சி தெளிவாக உள்ளது என்பது மட்டுமே ரொனால்டோவின் பதில். தற்போது அவர் கன்பெடரேஷன் கிண்ணத்தில் பங்கேற்பதற்காக ரஷ்யா சென்றுள்ளார். அங்கும் இதே கேள்விகள் துரத்தியதை அடுத்து, இன்ஸ்டாகிராமில், வாயில் விரல் வைத்து உஷ்ஷ்? என்று சொல்லும் தன் புகைப்படத்தை அவர் வெளியிட்டிருந்தார். இதற்கிடையே ரியல் மெட்ரிட் நிர்வாகமும் ரொனால்டோவுக்கு முழு ஆதரவு தெரிவித்திருந்தது. ஆனால், அது தாமதமாக வந்த அறிவிப்பு. நிர்வாகம் சரியான நேரத்தில் தனக்கு ஆதரவாக இல்லை என்ற வருத்தம் ரொனால்டோவுக்கு இருப்பதாகத் தெரிகிறது. இந்நிலையில், கடந்த ஆண்டு நவம்பர் மாதம், ரொனால்டோ உடனான ஒப்பந்தத்தை ரியல் மெட்ரிட் ஐந்து ஆண்டுகள் நீடித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# 15 ஆண்டுகளுக்குப் பிறகு இலங்கை வரும் சிம்பாப்வே




டெஸ்ட் மற்றும் ஒருநாள் கிரிக்கெட் போட்டிகள் கொண்ட தொடரில் விளையாடுவதற்கு இலங்கைக்கு எதிர்வரும் 26 ஆம் திகதி முதல் சிம்பாப்வே அணி சுற்றுப்பயணம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளது. அதன்படி 15 வருடங்களுக்குப் பிறகு இலங்கை வரும் சிம்பாப்வே அணி இலங்கையுடன் ஒரேயொரு டெஸ்ட் போட்டியிலும், ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரிலும் மோதவுள்ளது. இந்தப் போட்டிகள் அனைத்தும் காலி மற்றும் பல்லேகலை ஆகிய மைதானங்களிலேயே நடைபெறவுள்ளன.

இதில் காலி சர்வதேச விளையாட்டரங்கில் 17 ஆண்டுகளுக்குப் பிறகு முதற்தடவையாக சர்வதேச ஒருநாள் போட்டியொன்று நடைபெறவுள்ளது. முன்னதாக 2000 ஆம் ஆண்டு இலங்கை, பாகிஸ்தான் மற்றும் தென்னாபிரிக்கா அணிகளுக்கு இடையிலான முக்கோணத் தொடரின் போது இறுதியாக ஒருநாள் போட்டியொன்று காலி சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் விளையாடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அத்துடன், 2 வருடங்களுக்குப் பிறகு ஹம்பாந்தோட்டையில் ஒருநாள் போட்டி நடைபெறவுள்ளதுடன், இறுதியாக 2015ஆம் ஆண்டு இலங்கை மற்றும் பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ஒருநாள் போட்டி நடைபெற்றமை குறிப்பிடத்தக்கது.

எகிப்து நீதிமன்றம் அதிரடி:

# கார்குண்டு தாக்குதல் நிகழ்த்திய 31 பேருக்கு மரண தண்டனை



எகிப்தில் கார் குண்டு வெடிப்பு மூலம் அரச வழக்கறிஞரை கொலை செய்த குற்றத்திற்காக 31 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிமன்றம் அதிரடி தீர்ப்பளித்துள்ளது.

எகிப்தில் கடந்த 2015ஆம் ஆண்டு மூத்த அரச வழக்கறிஞராக பணியாற்றி வந்த ஹிஷாம் பராகத் என்பவரின் கார் மீது வெடிகுண்டுகள் நிறைந்த காரை மோதி வெடிக்கவிட்டு அவர் கொல்லப்பட்டார்.

இந்த தாக்குதல் தொடர்பாக முஸ்லிம் சகோதரத்துவ கட்சி மற்றும் ஹமாஸ் குழுவைச் சேர்ந்த பலரை பொலிஸார் கைது செய்தனர்.

இவர்கள் மீதான வழக்கு நீதிமன்றத்தில் நடைபெற்று வந்த நிலையில், தாக்குதலில் தொடர்புடைய 31 பேருக்கு மரண தண்டனை விதித்து நீதிபதிகள் தீர்ப்பளித்தனர். இவர்களுக்கான தண்டனை அடுத்த மாதம் 22ஆம் திகதி நிறைவேற்றப்பட வேண்டும் எனவும் அவர்கள் தங்களது தீர்ப்பில் குறிப்பிட்டனர்.

எகிப்து சட்டத்தின்படி, அரசாணைகளை வெளியிடும் தலைமை முப்திக்கு இந்த தண்டனை விவரம் அனுப்பப்பட்டது. இந்த தீர்ப்பை தலைமை முப்தி உறுதி செய்யும் பட்சத்தில் 31 பேருக்கும் மரண தண்டனை நிறைவேற்றப்படுவது உறுதி.

# உலகச் செய்திகள்

## உலக வலம்



★ ஜப்பான் கடல் பகுதியில் சரக்கு கப்பலொன்றுடன் அமெரிக்க போர்க்கப்பல் மோதியது. இதில் போர்க்கப்பல் கடுமையாகச் சேதமடைந்தது. இதில் போர்க்கப்பலின் மேல்தளத்திலிருந்த 7 வீரர்களைக் காணவில்லை. போர்க்கப்பலின் கெப்டன் கொமாண்டர் பிரைஸ் பென்சன் உட்பட 3 பேர் காயமடைந்தனர்.

★ கியூபாவுக்கும், அமெரிக்காவுக்கும் இடையே 50 ஆண்டுகளுக்கும் மேலாக நீடித்த பனிப்போரை முடிவுக்கு கொண்டு வரும் விதமாக முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமா - கியூபா ஜனாதிபதி ராவுல் கெஸ்ட்ரோ அரசுடன் 2015இல் பல்வேறு ஒப்பந்தங்களை செய்து கொண்டார். அவை அனைத்தையும் தற்போதைய ஜனாதிபதி டிரம்ப் அதிரடியாக ரத்து செய்தார். கியூபா தொடர்பாக புதிய கொள்கை அறிவிக்கப்படும் என்றும் அவர் அறிவித்தார்.

★ அரபு நாடுகள் மற்றும் கட்டார் இடையே நிலவும் பிரச்சினை காரணமாக அல் -ஜெசிரா அரபு செய்தி நிறுவனத்தின் டுவிட்டர் கணக்கு தற்காலிகமாக ரத்து செய்யப்பட்டுள்ளது.

★ லண்டன் அடுக்குமாடிக் குடியிருப்பில் ஏற்பட்ட தீவிபத்தில் உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 58 ஆக அதிகரித்துள்ளது. மேலும் சிலர் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர். மீட்பு பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

★ யேமனில் ஷப்வா மாகாணத்தில் உள்ள நாசிபா பகுதியில் அல் கொய்தா பயங்கரவாதிகள் சென்ற வாகனத்தின் மீது அமெரிக்காவின் ஆள் இல்லாத விமானங்கள் குண்டு வீசி தாக்குதல் நடத்தின. இதில் இருவர் உயிரிழந்துள்ளனர்.

★ பசுபிக் பெருங்கடலிலுள்ள தீவு நாடான வனாட்டுவின் ஜனாதிபதி பால்ட்வின் லான்ஸ்டேன், தனது 67 வயதில் காலமானார்.

# ஈராக்கில் ஐ.எஸ். பிடியில் ஓர் இலட்சம் அப்பாவிகள்



ஈராக்கில் ஆதிக்கம் செலுத்திவரும் ஐ.எஸ் தீவிரவாதிகள் மொசூல் நகரில் சுமார் ஓர் இலட்சம் பொது மக்களை கேடயமாக பிடித்து வைத்துள்ளதாக ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

ஈராக்கின் மிக பழமையான மொசூல் நகரை ஐ.எஸ். தீவிரவாதிகள் கடந்த 2014ஆம் ஆண்டு தங்கள் வசமாக்கிக் கொண்டனர். அங்கிருந்தவாறு அண்டை நாடான சிரியாவின் சில பகுதிகளையும் ஆக்கிரமித்தவாறு, மேற்கண்ட நாடுகளில் தீவிரவாத தாக்குதல்களை இவர்கள் அரங்கேற்றி வருகின்றனர்.

மொசூல் நகரை மீட்பதற்காக அமெரிக்க விமானப்படையின் துணையுடன் ஈராக் அரசப்படைகள் சுமார் மூன்று மாத காலமாக தீவிரமாக உச்சகட்டபோரில் ஈடுபட்டுவருகின்றனர். மொசூலின் கிழக்குப் பகுதியை கைப்பற்றி உள்ள அரசுப் படைகள் எஞ்சியுள்ள பகுதியையும் மீட்கும் முயற்சியில் மேற்குநோக்கி முன்னேறி வருகின்றனர்.

இந்நிலையில், அரசப்படையினரின் தாக்குதல்களிலிருந்து தற்காத்துக் கொள்வதற்காக ஐ.எஸ் தீவிரவாதிகள், சுமார் ஒரு இலட்சம் அப்பாவி பொதுமக்களை கேடயமாக பயன்படுத்தி வருவதாக ஐ.நா சபை தெரிவித்துள்ளது.

நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்து பொதுமக்களை கடத்திவந்து அவர்களை ஐ.எஸ் தீவிரவாதிகள் மொசூல் நகரில் அடைத்து வைத்துள்ளனர். அந்நகரத்தில் உணவு மற்றும் குடிநீர் கிடைக்காத நிலையில் அவர்கள் அவதிப்படுவதாகவும், மொசூலை விட்டு யாரும் வெளியேற முயற்சித்தால் தீவிரவாதிகள் அவர்களை கொன்று விடுவதாகவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

# இஸ்ரேல் பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு: ஐ.எஸ் பொறுப்பேற்பு; மறுக்கிறது ஹமாஸ்

இஸ்ரேலில் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டுள்ளது. இச்சம்பவத்துக்கு ஐ.எஸ். அமைப்பு பொறுப்பேற்றுள்ள நிலையில், ஹமாஸ் அமைப்பினர் அதனை நிராகரித்துள்ளனர்.

ரமழான் மாதத்தையொட்டி பாலஸ்தீனத்தை சேர்ந்த முஸ்லிம்கள், இஸ்ரேலுக்குள் அனுமதிக்கப்படுகின்றனர். இதனால் ஏராளமானோர் இஸ்ரேலிலுள்ள புனித தலங்களுக்கு சென்று வருகின்றனர். அந்தவகையில் ரமழான் மாதத்தின் 3ஆவது வெள்ளிக்கிழமையான கடந்த 16ஆம் திகதி ஜெருசலேம் பழைய நகருக்கு அருகே அல்-அக்சாவிலுள்ள பள்ளிவாசலில் சிறப்பு தொழுகை நடைபெற்றது. இதில் இஸ்ரேல் மட்டுமின்றி பலஸ்தீன், மேற்கு கரை போன்ற பகுதிகளிலிருந்து ஏராளமானோர் கலந்துகொண்டனர்.

இந்த தொழுகைக்காக ஏராளமான பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர். இந்நிலையில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது திடீரென 2 பேர் துப்பாக்கிச்சூடு நடத்தினர். அப்போது மற்றொருவர் ஹதாஸ் மால்கா என்ற பெண் பொலிஸ் அதிகாரியை கத்தியால் குத்தினார். இதில் படுகாயமடைந்த அவர் அருகிலுள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். ஆனால் அங்கு சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்தார்.

இதற்கிடையே பொலிஸார் மீது தாக்குதல் நடத்திய அந்த 3 பேரையும் பொலிஸார் சுட்டுக் கொன்றனர். அவர்கள் குறித்து விசாரணை நடத்திய போது, 3 பேரும் மேற்கு கரையை சேர்ந்தவர்கள் என தெரிய வந்தது.

இந்நிலையில் இச் சம்பவத்துக்கு ஐ.எஸ். இயக்கத்தினர் பொறுப்பேற்பதாக அறிவித்தனர். ஆனால், அதை நிராகரித்துள்ள ஹமாஸ் அமைப்பினர், தாக்குதலில் ஈடுபட்ட 3 பேரும் உள்ளூர் இடதுசாரி இயக்கத்தை சேர்ந்தவர்கள் என்று தெரிவித்துள்ளனர்.

Printed and Published by Freelanka Media Ltd. #156, Hospital Road, Kalubowila, Dehiwala. on 19TH JUNE 2017